# பிரபந்தப் பூங்கா



இரசிகமணி கனக. செந்திநாதன்

# பிரபந்தப் பூங்கா

இரசிகமணி

கனக. செந்திநாதன்.

வரதர் வெளியீடு

முதற்பதிப்பு:
1967 புரட்டாதி.

விலை ரூபா. 4-50.

ஆசிரியரது பிறநூல்கள்:-

1. கவிதை வானில் வளர்பிறை.
2. மூன்ருவது கண்.
3. ஈழத்துக் கவி மலர்கள்.
4. கலைமடந்தையின் தவப் புதல்வன்.
5. ஈழத்து இலக்கிய வளர்ச்சி.
6. வெண் சங்கு (சிறுகதைகள்)
7. ஈழம் தந்த கேசரி. (அச்சில்)

வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# முகவுரை.

இலக்கியம் படிப்பிக்கும் ஆசிரியன் பல நூல்களின் பொது அம்சங்களையும் நன்கு தெரிந்தவனும், அந்நூல்களி லுள்ள நன்கவி, புன்கவி புரிந்தவனும் இருந்தாலொழிய மாணவர்களுக்கு நயம்காட்ட முடியாது; இரசனை ஊட்ட முடியாது.

இராமாயணம் போன்ற பெருங் காவியங்களை இரசிப் பதற்குமுன் அதன் சுற்றுப் பிரகாரங்களாக அமைந்திருக் கும் பள்ளு, பரணி, கலம்பகம், தூது, குறவஞ்சி, பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்த நூல்களைப்பற்றி அறிதல்வேண் டும். அவற்றில் எவ்வளவோ அருமையான கவிதைகள் நன்முத்துக்கள் - கிடக்கின்றன. அவற்றைத் தாம் படித்து உணர்வதோடு மாணவர்களுக்கும் அறிமுகம் செய்துவைத்தால் இந்த இரசனை என்பது ஏதோ எட்டாக் கனியாக ஆகிவிடாது. இலக்கிய பாட நேரத்தில் பாட புத்தகத்தோடு அல்லற்படும் மாணவர்களுக்குப் பாஷைப் பாட நேரத்தில் நந்திக் கலம்பகம், கலிங்கத்துப் பரணி, முக்கூடற்பள்ளு, பறுளாய் விநாயகர் பள்ளு, குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களை அறிமுகஞ்செய்து வைத்து நல்ல பாடல்களைப் படிப்பித்தால் நிச்சயம் பயன்பெற லாம். அந்த நோக்கத்தோடும், பாடசாலையை விட்ட பின்பு பல தொழிற்றுறைகளில் இருந்துகொண்டு இலக் கிய இரசனை பெறத் துடிக்கும் ஒருசாராரை மனதிற் கொண்டும், உயர் வகுப்பு மாணவர்கள் தாமேபடித்து அறிந்து கொள்ளக் கூடியதாகப் புத்தகங்கள் இல்லையே என்ற குறையை நிறைவாக்கவும், இந்நூலை வெளியிடத் துணிந்தேன்.

இந்நூலில் பள்ளு, பரணி, கலம்பகம் சம்பந்தமான எட்டுக் கட்டுரைகள் இருக்கின்றன. இக் கட்டுரைகள் நூலாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுந்தவை அன்று. இலங்கை வானொலியில் 1962-ம் ஆண்டு பேசப் பட்டவை.

வானொலியில் பேசிய பேச்சுக்களை அப்படியே நூலாக்குதல் நன்றன்று என்ற எண்ணத்தில் சில இடங்களில் சிறிய மாற்றங்கள் - வசனங்கள் தொடர்களில் செய்திருக்கிறேன்.

இலங்கை வானொலியில் பேச்சுப் பகுதிக்குப் பொறுப்பாளராயிருக்கும் அருள். தியாகராசா அவர்கள் பழைய நூல்களிடத்தும், யாழ்ப்பாணப் புலவர் பெருமக்களிடத்தும், தமிழை வளர்த்தோரிடத்தும் வைத்திருக்கும் பெருமதிப்பு அளவிடற்கரியது. தூது உலா, பள்ளு, பரணி என்ற வரிசையில் வாராவாரம் பல நல்லறிஞர்களைக் கொண்டு அவர் சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்தார். அவ்வரிசையில் இலக்கிய இரசிகனாகிய எனக்கும் இடந்தந்து இத்துறையில் என்னை ஊக்கப்படுத்தியமைக்காக அன்னாருக்கு என் நன்றி.

ஈழத்திலே, சிறந்த கவிஞராகவும், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் விளங்கும் பண்டிதர் க. சச்சிதானந்தன் பீ. ஏ. அவர்கள் இந்நூலுக்குச் சிறந்த அணிந்துரை ஒன்றை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கு என் நன்றி.

ஈழகேசரி இளைஞர் சங்கத்தில் முளை கொண்டு, மறுமலர்ச்சிச் சங்கத்தில் பயிராகி, இன்றுவரை - இருபத்தைந்து வருடங்களாக - நிலைத்துவிட்ட நட்பாகிய விருட்சத்திற்கு உரிமையாளராய், என் எண்ணத்தில் நீங்காமல் உறைபவராய் இருப்பவர் திரு. தி. ச. வரதராசன் அவர்கள். ஈழத்தில் இலக்கிய நூல்களை - பாடநூல்களை அன்று - வெளியிடுவதில் உள்ள சிரமத்தை நோக்காது இதை வரதர் வெளியீடாக வெளியிடுவதற்குத் துணிந்த அவர் துணிவுக்கு என் உளம் கனிந்த நன்றி

இந் நூலில் உள்ள எட்டுக் கட்டுரைகளிலும் நாற்பது கவிதைகளுக்குமேல் ஓரளவு தொட்டுக் காட்டியிருக்கிறேன். சில கவிதைகளுக்குச் சுருக்கமாக நயம் கூறமுயன்றிருக்கிறேன். இவற்றை வாசிக்கும் இரசிகர்கள் இருபது பாடல்களையாவது இரசித்துப் படித்து, 'ஓ, இவை நன்றாகத்தான் இருக்கின்றன' என மனமகிழ்ச்சி எய்திப் பிறர்க்கும் வாசித்துக்காட்டி மகிழ்வார்களேயானால் அதுவே இந்நூலை வெளியிட்ட பயன் என நான் இறும்பூதெய்துவேன்.

குரும்பசிட்டி, 17-8-67. கனக. செந்திநாதன்.

## அணிந்துரை

ஒரு நூலுக்குப் பொருளும் அதைக் கூறும் வகையும் இருகண்களாம். ஒரே பொருளைக் கூறும் வகையாற் பல்வேறு சிருட்டிகள் ஆக்குவார் புலவோர். அன்பு என்னும் ஒரே பொருளை உலகப் புலவோர் கூறியவகைகள்தாம் எத்தனை! இராமனின் மேனி நீலநிறமுடையது, முகம் தாமரையை ஒத்தது என்ற கருத்தினைக் கம்பன் எத்தனை எத்தனை வகையாகச் சித்திரஞ் செய்கின்றான். சீதை சிற்றிடையாள் என்ற கருத்தை எத்தனை விதமாகக் கோலமிழைத்திருக்கிறான் அவன். இராமன் பெருந்தகை என்பதைக் காட்ட எத்தனை வெவ்வேறாய சூழ்நிலைகளை உருவாக்கினான் அவன்.

பரணி, உலா என்பவை வீரத்தினைப் புகழும் இரு வேறு சிருட்டிகள். பள்ளு மருதக் காட்சியை இழைக்கும் ஒரு கோலம்; கலம்பகம் தலைவனின் அன்பையும் பெருமையையும் தீட்டும் ஒருவகைச் சித்திரம்; இங்ஙனமாக, கூறும் வகையால் அழகுக்குப் பல உருவங்களைச் சேர்ப்பார் புலவோர்.

சிற்றிலக்கியங்களில் ஒரு சிலவற்றைச் செந்தமிழ் உலகுக்கு ஆற்றுப்படுத்த முன்வருகிறார் இரசிகமணி கனக. செந்திநாதன். பள்ளு,பரணி, கலம்பகம் ஆகிய மூன்றுசிற்றிலக்கிய வகைக்கும் எட்டு நூல்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு இலக்கிய அமைப்பை அழகாக விளக்குகிறார் இரசிகமணி. இவருடையகட்டுரைகளை-ஆற்றுப்படையைப் படித்தவுடன் ஒவ்வொரு நூலையும் தேடி அலைய வேண்டும் போல ஒரு ஆர்வம் உள்ளத்தே எழுகின்றது. இரண்டொரு பாடல்களைக் காட்டியவுடன் முழு நூலையும் படிக்க வேண்டுமே என்று ஆசை பிறக்கிறது. பருளாய்

வயற்கரையிலே காட்டும் பள்ளியின் பாற்கஞ்சியை உண்டவர்கள், ஏனைய காட்சிகளைச் சுவைக்க நாக்கைச் சப்புக் கொட்டுவார்கள். பேய்கள் கூழுண்ட காட்சியைக் கண்டவர்கள், பரணி முழுவதையும் படிக்க ஆசைப்படுவார்கள். செங்கழுநீரைப்பறித்துக் குழலிலே சூடும் பெண்டிரை எங்கும் காண்போம் - ஆடவரின் உயிரைத் திருகிச் சூடும் பெண்டிரைச் செந்திநாதன் காட்டத்தான் காண்போம். ஈழத்தில் மழைபொழியக் கண்டிருக்கிறோம். ஆனால் செந்திநாதன் நூலிலே புலவர்களைக் கொண்டு பெய்விக்கும் மழை மனதிலே அதிர்ச்சியை உண்டாக்குகிறது. இடிக்க, முழங்க, ஓட, சரியப் பொழியும் மழையைக் கண்டோர், கவியிலேதான் இனிச் சோறுண்ணவும் ஆசைப்படுவார்கள்.

முழுநூல்களும் இப்படித்தான் இருக்குமோ யாரறிவர்? தெரிந்தெடுத்த பகுதிகளை நோக்கும்போது முழுநூலும் இப்படித்தான் இருக்குமென்று தோன்றச் செய்துவிட்டார் செந்திநாதன். இப்படியான செப்படி வித்தையைச் செய்ய அவருக்கு இரு ஆற்றல்கள் உள. ஒன்று; இயல்பாகவே நல்ல கவிதைகளைத் தெரிவு செய்யும் ஆற்றல். இரண்டு; தெரிவு செய்த கவிதைகளின் சுவையை வாசகர்களுக்கு ஊட்டுதல். கவியில் உயிரோடுமிடம் செந்திநாதனுக்கு மணக்கும். அது அவர் பிறப்போடு பிறந்தது. தான் பெற்ற உணர்வை அப்படியே சொற்சித்திரமாக வடிக்கும் ஆற்றல் அவர் நாவில் பிறந்தது. அதுவே அவர் தொட்டதெல்லாம் அழகுச் சிலையாகும் இரகசியமாம்.

முன்னைய செந்திநாதன், 'கவிதைவானில் ஒரு வளர்பிறை'யைத் தந்து 'ஈழத்துக் கவிமலர்களை'க் காட்டி, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'யை எடைபோட்டு 'இரசிகமணி' தான் என்பதை நிரூபித்தார். இப்பொழுது மதுரையின் வீதிக்கும், காளிகோவிலுக்கும், நிலாமுற்றத்துக்கும் மாறி மாறி அழைத்துச் செல்கிறார். இதனால், அவர்

தாம் தமிழ் இலக்கியத்தின் மரபுக்கு ஆணிவேர் என்பதைக் காட்டிக் கொண்டார்; 'காவடிக்காரனை'யும், 'அன்னதானக் கும்பலை'யும் 'கொட்டகைக் கூத்தை'யும் 'சரமகவிப் புலவரை'யும் சிறு கதைகளிலே காட்டிய செந்திநாதன், இதுகாறும் தம்முடைய இலக்கிய ஆழத்தை அறியாதார்க்குத் தாம் பழமைக்குப் பழையன்; புதுமைக்குப் புதியன் என்பதை இந்நூல் மூலம் நிலைநிறுத்திவிட்டார் என்பதுண்மை.

இந்நூல் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரிய கலாசாலை மணவர்களுக்கும் நிச்சயம் பயன்படும். ஐம்பது நல்ல கவிதைகளைச் சுவைக்க, கவிதைகளுக்கு நயமெழுத விரும்புபவர் கட்டாயம் படித்துப் பார்க்கவேண்டிய நூல் இது. பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற நூல் என்று நான் குறிப்பிட்டிருப்பதனுல் மற்றையோர் இதை அணுகக் கூடாது என்று எண்ணவேண்டாம். இராமாயண, பாரத காவியங்களையும் சங்கப் பாடல்களையும் சுவைக்க விரும்புபவர்கள் முதற்கண் அடிப்படையாக இப்படியான பிரபந்த வரிசை நூல்களை இரசித்துப் படித்தல் வேண்டும். அப்போதுதான் தமிழிலக்கியக் கல்வி பூரணத்துவம் பெறும்.

இந்நூலைப் படித்து முடித்ததும் சில பாடல்கள் மனத்தை விட்டகலாது சுற்றிச் சுற்றி ஒலி செய்கின்றன.

> "பெண்ணிலா ஊரிற் பிறந்தாரைப் போலவரும்
> வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே"

என்னும் அடிகள் என்னவோ என்னை ஆட்கொண்டுவிட்டன. 'இரசிகமணி' தமது ஐம்பதாவது வயதில் வெளியிட்ட இந்தப் 'பிரபந்தப் பூங்கா' தன் நறுமணத்தால் நிச்சயம் நெடுநாள் வாழும்; வழங்கும்.

மாவிட்டபுரம்
6-10-67.

க. சச்சிதானந்தன்.

வரதர் வெளியீடு

இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் என்னுடைய நெடுநாள் நண்பர்; இலக்கிய நண்பர். "மறுமலர்ச்சி"க் காலந் தொட்டு அவருடைய பழக்கம் எனக்குண்டு. இலக்கிய உலகத்தில் அன்று வைத்த காலை நான் நிலையாக ஊன்றவில்லை. ஆனால் நண்பர் செந்திநாதன் அன்று தொட்டு இன்று வரை இலக்கிய உலகிலே ஊறித் திளைத்து வருகிறார். பழமைக்கும், புதுமைக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந்து வருகிறார்.

அவருடைய புதுமை இலக்கிய முயற்சிகளையே பெரும்பாலும் வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இச் சிறு நூல் அவருடைய பழமை இலக்கிய இரசிகத் திறனை நன்கு எடுத்துக் காட்டும்.

இந் நூலின் ஆசிரியர் எனது நண்பர் என்ற காரணத்தினால் மட்டுமன்று, வளர்ந்து வரும் இலக்கிய இளைஞர்களுக்கு இந் நூல் அவசியம் தேவையான ஒன்று என்ற காரணத்தினாலேயே இதனை வெளியிடப் பெரிதும் விரும்பினேன்.

இதனை வெளியிட மனமுவந்து அனுமதித்த இரசிகமணிக்கு எனது நன்றி.

யாழ்ப்பாணம்,
10-10-67.

தி. ச. வரதராசன்
நிர்வாகி.

# பள்ளுப் பிரபந்தம் 1.

## (அறிமுகம்)

தமிழிலே பிற்காலத்தெழுந்த சிற்றிலக்கியங்களைப் பிரபந்தங்கள் எனக் குறிப்பிடுவர். அவை தொண்ணூற்ருறு வகையுடையன. அத் தொண்ணூற்ருறுள் பள்ளுப் பிரபந்தம் ஒன்ருகக் குறிப்பிடப்படவில்லை, எனினும் உழத்திப் பாட்டு என்ற ஒரு வகை நூல் அதனுள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உழத்திப் பாட்டே பிற்காலத்தில் பள்ளுப் பாடலாக மலர்ந்தது. உழத்திப்பாட்டின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், சதுரகராதி என்பவை வரையறுத்துக் கூறியுள்ளன. நவநீதப் பாட்டியல், சதுரகராதி முதலியவை கூறும் இலக்கணம் **பள்ளுப்பாட்டின்** இலக்கணமேயாகும். சதுரகராதி கூறும் இலக்கணத்தை நாம் அவதானித்தல் நன்று. ஏனெனில் பள்ளு என்னும் நூலில் அடங்கியுள்ள பிண்டப் பொருள்கள் யாவை என அறிய அது உதவுகின்றது. "கடவுள் வணக்கம், முறையே மூத்த பள்ளி இளைய பள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமைகூறல், முறையே அவர் வரலாறு, நாட்டு வளன், குயிற்கூக் கேட்டல், மழைவேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறி யோர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்டல், இவற்றிற் கிடையிடை அகப்பொருட்டுறையுங் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையவளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவன் அதுகூறல், ஆயரை வரு

வித்தல், அவர்வரல்' அவர் பெருமை கூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான் போலவரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடிசிற் கொடுவரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தற் கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் ஆற்றல், அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளம்கூறல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்துவித்தல், அதைப்பண்ணைத் தலைவர்க்கு அறிவித்தல், நாற்றுநடல், விளைந்தபின் செப்பஞ் செயல், நெல்அளத்தல், மூத்த பள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசலென இவ்வுறுப்புக்கள் உறப் பாட்டுடைத்தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர இவற்றாற் பாடுவது''. சிந்தும் விருத்தமும் மாத்திரமன்றிக் கலிப் பாக்களும் பள்ளுப் பாடல்களுள் உண்டு. பள்ளுப் பிரபந்தங்களுட் சில, தெய்வங்களில் ஒன்றைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளன; வேறுசில மக்களுட் சிறந்தோனொருவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. இவ்விருவகைப் பள்ளுகளுக்கும் உதாரணமாக முறையே நம்மீழமண்டலத்தே பாடப்பட்ட பருளாய் விநாயகர் பள்ளையும், தண்டிகைக் கனகராயன் பள்ளையும் கூறலாம்.

பள்ளு குறவஞ்சி முதலிய நூல்கள் ஏன் எழுந்தன? என்பதன் காணத்தை ஆராயப் புகுந்த அறிஞர் ஒருவர் ''மூவேந்தர்களுடைய ஆட்சி மறைந்ததினுல் தமிழுலகம் இருளில் இயங்கிக்கொண்டு நெடுங்காலம் தத்தளித்தது, பிறமொழிகள் வந்து அல்லற்படுத்திக்கொண்டிருந்தன. தமிழ்ப் புலவர்களைப் புரக்கும் தலைவர்களும் அரசரும் அரியராயினர், பெருங் காவியந் தோன்றும் நிலையும் ஏற்படவில்லை. எனவே பழைய இலக்கிய மரபுகள் மாறிச் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின....புலவர்கள் குறவஞ்சி, பள்ளு முதலிய நூல்களைச் செய்தார்கள்; குறிஞ்சி நிலத்

தைப்பற்றிக் குறவஞ்சியும், மருத நிலத்தைப்பற்றிப் பள்ளும் தோன்றின'' என்கிறார். பள்ளுப் பிரபந்தங்கள் எல்லாம் சொல்நயம் பொருள் நயம் என்பனவெல்லாம் விரவி இருப்பதினாலும், சந்த இன்பமும் தாள அறுதியும் வாய்ந்து வாத்திய சகிதமாய் இசைவல்லார் பாடிய விடத்து இனிமைபயப்பதனாலும், பாமரர்கள் உற்சாகமாக நடிப்பதற்கு உபயோகமாக அமைந்திருப்பதனாலும் இயல் இசை, நாடக நெறிப்பட்டனவாய்ச் சிறப்படைகின்றன. பயிர்த்தொழில் செய்து வாழும் மக்கள் நாள் முழுவதும் சோர்வின்றி உழைக்கின்றார்கள். அவர்கள்உழைப்பிலேயே உண்மையான இன்பத்தையும் மனநிறைவையும் அடைகிறார்கள். போதுமென்ற மனநிறைவும், கவலையின்மையும், காதலுணர்ச்சியும்பொருந்திய அவர்களதுவாழ்க்கையினைக் கண்ட தமிழ்க் கவிஞர்கள் சென்ற முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவர்களைக் கருப்பொருளாக வைத்து பள்ளுப் பிரபந்தங்களைப் பாடத் தொடங்கிவிட்டார்கள். தமிழும் பொதுமக்களோடு நேரிடையாகவே உறவாடத் தொடங்கிவிட்டது. கிராம வாழ்க்கையில் உழுதல், பரம் படித்தல், நாற்று நடுதல், அருவி வெட்டுதல் முதலிய வேலைகளில் உழைத்து அலுத்த மக்கள் ஓய்வு நேரங்களில் பாட்டும் கூத்தும் கும்மாளமுமாகப் பொழுதைப் போக்க விரும்புவது இயற்கை. அப்படியான காலங்களில் அவர்கள் கோலாட்டம் வசந்தன் போன்ற ஆட்டங்கள் ஆடவும், கூத்து நடத்தவும் பெண்கள் கும்மியடிக்கவும் நினைப்பார்கள், அவர்கள் ஆடவும் பாடவும் கூத்து நடத்தவும் கூடிய சந்தத்தில் இலகுவான பாடல்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. பெரிய விடயங்கள் அடங்கிய கடும் நடைப்பாடல்கள் அவர்கள் மனதில் நிலைத்து நிற்க மாட்டா. இவற்றை மனதுட் கொண்டே 'மக்கள்கவி' யாக வந்த சில சிறந்த புலவர்கள் தாள அறுதி கொண்ட பள்ளுப் பாடல்களை இயற்றினார்கள். உயிரோட்டமுள்ள பாடல்களை ஆக்கி அளித்தார்கள். இந்தப் பள்ளுப்பாடல்களுள் ஒருசில நாளடைவில் திரிந்து - உருமாறி - நாட்டுப் பாடல்களாக எங்கும் வழங்கத் தொடங்கிவிட்டன.

பள்ளுப் பாடல்களும் ஒருவகையான நாட்டுப் பாடல்கள் தான் என்றாலும் தற்போது வழங்கிவரும் கொச்சையான இரசனைத்திறம் குறைந்த - நாட்டுப் பாடல்களுக்கும் இவற்றிற்கும் வெகு வித்தியாசம் உண்டு என்பதை நாம் மனதிற் கொள்ளல் வேண்டும்.

பள்ளுப் பாடல்களுள் சிறந்ததாகிய முக்கூற்றுப் பள்ளுப்பாடல் ஒன்றைப் பாடி ஐம்பது வருடங்களுக்கு முன் கோலாட்டம் ஆடிய நிகழ்ச்சியொன்றை இரசிகமணி டி. கே. சி. அவர்கள் விபரிப்பதைப் பார்ப்போம்:

"கோலாட்டம் என்றால் பேனுக்குச்சி, முருங்கைக்குச்சி கொண்டு, எங்கே முறிந்துபோகுமோ என்று பயந்து பொத்திப் பொத்தி அடிக்கிற வியாபாரம் அல்ல, பக்கத்து மலையிலிருந்து வந்த நாங்கு, கோங்கு, தேக்கு முதலிய வைரம் பாய்ந்த மரங்களினால்ச் செய்த கனத்த கம்புதான் கோல். கணீர் கணீரென்று அடி விழும், சத்தம் இரண்டு தெருவுக்குக் கேட்கும். முற்றத்தில் நின்றுதான் கோலாட்டம். கால் மிதிக்கிற தாளத்தில் தரை புழுதிக்காடாய்ப் போய்விடும்.

ஆற்று வெள்ளம் நாளை வர
ஆற்று வெள்ளம் நாளை வர
ஆற்று வெள்ளம் நாளை வர

என்று மூன்று தடவை அடியை நிரவல் செய்துவிட்டு, பிறகு எதுகையோடு,

தோற்றுதே குறி

என்று வேகம் விழும் போது பார்ப்பவர் எல்லோருடைய உள்ளமும் பாட்டிலும் ஆட்டத்திலும் கலந்துகொள்ளும் அதில் ஒரு பரவச உணர்ச்சிதான்; ஐம்பது வருஷமாய் எனக்கு மறக்க முடியவில்லை".

கதிரமலைப் பள்ளில் வரும் அநேக பாடல்கள் இப்படிக் கோலாட்டம், வசந்தன் அடிப்பதற்கேற்ற பாடல்கள்

என்பதற் கையமில்லை; உதாரணத்திற்கு ஒரு பாடலில் பாதிப்பாட்டைப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம்.

கொண்டல் வண்ணனுக் குரிய மருகன்
குமரன் அமர குஞ்சரி
கொழுநன் மாவிலி கங்கை வயலில்
கூடி யாடிப் பாடியே
தண்டை புலம்ப இடைகள் நோவத்
தரள வடங்கள் அசையவே
தாவித் திரிந்து தூவி நாற்றுத்
தன்னை நடவாரும் பள்ளிரே''

இப்படிப் பொழுது போக்குவதற்கும், கோலாட்டம், கும்மி, வசந்தன் அடிப்பதற்கும், நாடகம் ஆடுவதற்கும் வாய்ப்பாக எழுந்த பள்ளுப் பிரபந்தங்களை அவ்வகையிலோ இலக்கிய நயத்திலோ நோக்காத சிலர், இவை நிலப்பிரபுத்துவகாலத்தின் அடிமை மனப்பான்மையைக் காட்டுகின்றன என்றும், இவ்வகை இலக்கியங்கள் தமிழர் வாழ்வின் இழிந்த தன்மையை விளக்குகின்றன என்றும், கூறி நகையாடுகின்றனர். இக்காலச் சூழ்நிலைகளையும் எண்ணமாற்றங்களையும் வைத்துக்கொண்டு அக்காலக் கிராமவாழ்க்கையை நினைத்தல் கூடாது. பள்ளுப் பிரபந்தங்களில் வரும் ''ஆண்டை'' அக்கிராமத்துக்கே ஊருணி போன்றவன். ''ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு'' என்ற குறளுக்கு இலக்கணமாய் அமைந்தவன். அவனிடம் இருக்கும் பொருள் - நெல் - ஊருணியில் இருக்கும் நீர்போல உதவுமென்று எல்லோரும் அறிவர். அவன் குடிமக்களுக்கும் அவனுக்கும் உள்ள உறவு அன்புத்தளையாற் கட்டுண்டது. தன் குடிமக்களில் ஒருவனுக்கு ஒரு சிறு துன்பம் நேரிட்டாலும் அவன் பொறுக்க மாட்டான். ஆண்டையின் குடும்பத்துக்கு ஒரு சிறிய கெடுதி ஏற்பட்டாலும் அவர்கள் உருகிவிடுவார்கள்.

இப்பள்ளு நூல்களை சிலர் கூறும் காரணங்களால் நாம் படிக்காமல் விட்டோமானுல் அருமையான இலக்கியச் சுவைநிறைந்த முக்கூடற் பள்ளை நாம் அனுபவியாதவர்களாவோம். ஈழத்திற் சிறந்த புலவராகிய சின்னத்தம்பிப்புலவரின் அருமையான - தலைசிறந்த படைப்பாகிய பருளைவிநாயகர் பள்ளின் சுவையைத் தெரியாதவர்களாகி விடுவோம்;

ஒவ்வொரு நாட்டிற்கும் அதனதன் மண்வாசனையைப் பிரதிபலிக்கும் தேசீய இலக்கியங்கள் தேவை என்று சமீபகாலமாகப் பிரசாரஞ் செய்யப்பட்டு வருகிறது; அது தேவை என்பதிலும் ஐயமில்லை; ஆனுல் அதற்கு முன் நம் நாட்டில் எவை தேசீய இலக்கியங்களாக மிளிருகின்றன என்பதை வரையறை செய்துகொள்ள வேண்டாமா? அப்படி நோக்கும்போது பள்ளுப் பிரபந்தங்கள் அந்த அந்தஸ்தை அடைந்தே தீரும்;- என்ற எண்ணம் எழுகின்றது. உதாரணமாக பருளாய் விநாயகர் பள்ளில் வரும் இரண்டு பள்ளிகளை நோக்கினுல், ஒருத்தி ஈழமண்டலப் பள்ளியாகவும் மற்றவள் சோழமண்டலப் பள்ளியாகவும் சித்திரிக்கப்படுகிருள். சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல நடத்தவேண்டிய பாத்திரங்கள் இவை; ஆனுல் கவிஞர் ஈழமண்டலப் பள்ளிமூலம் தாம் பிறந்த நாட்டைக் கூறும்போது சற்றுப் பெருமிதமாகவே கூறுகிருர். இவை தேசீயப்பாடல்கள் என்ற அந்தஸ்தை அடையமுடியாதா? பாடலைப் பாருங்கள்:-

"பண்ணிற் ருேயப் பொருள் முடிப்புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன்முடிப்புக் கட்டி வைத்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே.

வெறும் சொல்லலங்காரக் கவிதைகளைப் பொருள்செய்யாமல் பொருளுள்ள கவிதைகளையே இரசிகர்களாகிய மக்கள் விரும்பினர்; தகுதி அறிந்து ஈந்தனர் என நயம்பட

"பண்ணில் தோயப் பொருள்முடிப்புக் கட்டிப் பாடும் பாவலர்" என்ற வரிகள் விளக்குகின்றன; பொருள் முடிப் புக் கட்டிப் பாடும் புலவர்க்கு பொன்முடிப்புக் கட்டி வைத் துக் கொடுத்தனர் என்பதில் உள்ள நயம் இரசிக்கத்தக் கது. சாதாரணமக்களே கூட கவிதைநயம் அறியக்கூடிய வர்களாக இருந்தார்கள் என்ற உட்பொருளிலும் 'எண்ணி' என்ற சொல் நயம்பட அமைந்திருக்கிறது. ஈழம் புலவர் பெருமக்களை எப்படிக் கௌரவிக்கிறது என்பதையும் புல வர் ஊகிக்க வைக்கிறார். இலக்கிய நயத்தோடு கூடிய தேசியப் பாடல்தான் இது.

"கற்ற நூலுணர் பண்டிதன்மார் பஞ்ச
காவியம் சட்கலைக் கடல் தோய்ந்து
எற்றை நாளும் கல்வித் திறம் பார்த்திடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே."

வடமொழிச் சாத்திரங்களிலும், தமிழ்க் காவியங்களிலும் வல்லுனராகிய பண்டிதர்கள் யாதொரு கவலையுமில்லா மல் எப்போதும் கல்வித்திறம் பார்க்கத் தர்க்கம் செய்து கொண்டிருக்கும் நாடு ஈழவளநாடு என்று கூறியிருப்பதை நோக்கினல் புலவர் பெருமான் தன் நாட்டை ஒரு படி உயர்வாகவே கூறுகிறார்என்பதும் ஈழநாட்டிலுள்ளார்அவ சியம் அறியவேண்டிய தேசபக்திப் பாடல்கள் இவையென் பதும் புலனுகும். "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்பதற்கு முன் விரிவுரைபோல நம்நாட்டு மாணவர்க்கு இவை படிப் பிக்கப்படுதல்வேண்டும். பாவலர்களையும் பண்டிதர்களையும் பார்த்தாற்போதுமா? பதியாகிய சிவபெருமானின் தொண் டர்களின் கதி என்ன? கதிரைமலைப் பள்ளின் ஆசிரியர் கூறுகிறார்

வேணிச் சங்கரர் தொண்டர்கள் என்று
வீடு தோறும் இரப்பவர்க் கெல்லாம்
மாணிக்கம் அள்ளிப் பிச்சை கொடுத்திடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே

புவவருக்குப் பொன் கொடுத்தால், சங்கரர் தொண்ட ருக்கு மாணிக்கம் அல்லவா கொடுக்கிறார்கள் ஈழவள நாட்டார். 'சங்கரர் தொண்டர்கள் என்று' எனவரும் வரியிலுள்ள 'என்று' எத்தனையோ கருத்துள்ள சொல், 'பங்கப் பழனத்துழும் உழவர் பலவின் கனியைப் பறித் தது என்று சங்கிட்டெறிய' என்ற பாட்டில் வரும் என்று போலவும் கொள்ளலாம். உண்மையான தொண்டரல் லாத ஒருவரே கபடமாக அப்படிச் சொல்லி வீடுதோறும் இரந்துவந்தாலும், பொருட்படுத்தாமல் மாணிக்கம் அள் ளிக் கொடுக்கும் நாடு என நயம்படக்கூறுகிறார். புதிய பந்தி எல்லாப் பள்ளுப் பாடல்களும் ஒரே கதியிற் சென்றா லும் சில கவிஞர்கள் தம் கற்பனை வளத்தைக் காட்டவும், தமக்கு நன்கு கைவரக்கூடிய பாடல்களை ஆக்கிச் சேர்க்க வும் முயன்றிருக்கிறார்கள். குருகூர்ப் பள்ளின் ஆசிரியர் அருமையான தாலாட்டுப் பாடல்களைப் பாடித் தம் பள் ளில் சேர்த்துள்ளார். நாற்று நடவந்த பள்ளியர் பக்கத் தில் இருக்கும் மரங்களிலே ஏணை கட்டித் தம் பிள்ளைகளை அதனுள் வளர்த்தித் தாலாட்டுப் பாடியதாக அவர் பல பாடல்களைப் புனைந்துள்ளார்.

சமய சம்பந்தமான உண்மைகளை - இலகுவான புரா ணக் கதைகளை - பள்ளு ஆசிரியர்கள், தத்தம் பள்ளில் வரும் பள்ளிகள் மூலமாக நாட்டுவளங் கூறுவதிலும், ஏசலிலும் புகுத்திச் சமய வளர்ச்சிக்கு அடிகோலியுள் ளார்கள். திருமலை முருகன் பள்ளு ஆசிரியர் சமயத்தின் சாற்றையே பிழிந்து அருமையான பாடலாகப் பாடியுள் ளார். பள்ளுப் பாடல்களைப் பற்றி நன்கு ஆராய்ந்தவ ரும் முக்கூடற்பள்ளை நன்கு பதிப்பித்தவருமாகிய மு. அருணாசலம் அவர்கள் சக்திப் பத்திரிகை ஒன்றிலே அப் பாடலை விளக்கி எழுதி இருப்பது இது. "மனமானது ஒரு நிலையில் இருப்பதில்லை. சதா ஓடிக்கொண்டிருக்கிறது, இது காரணமாக வினையானது மேலும் மேலும் வந்து குவிந்துகொண்டே இருக்கிறது. மனமாகிய நிலத்திலே சஞ்சிதம் என்ற பழைய வினையுள் ஒரு பகுதியானது விடா

மல் களையாக அடர்ந்து மண்டிக் கிடக்கிறது, இந்தக் களையனைத்தையும் அறவே வெட்டி எறிந்தால்தான் அந்த மனதில் பேரின்பமாகிய பயிர் விளைவதற்கு இடமிருக்கும். எனவே இந்த விளையைப் போக்கிப் பின்னர் அந்த நிலத்தை உழுதாகவேண்டும். ஞானம் (சிற்பரை) என்ற ஏரைக் கட்டி அதிலே அருள் என்ற கொழுவைப் பொருத்தி உழவேண்டும். ஆனந்தம் என்ற நீரைப் பாய்ச்சவேண்டும். பாய்ச்சிய பின் சிவம் என்ற விதையை விதைக்கவேண்டும். முருகப்பெருமான் ஆறுமுகக்குருவாய் வந்து அடியவர் உள்ளத்திலே இவ்விதமாய்ப் பயிர்த் தொழிலைச் செய்து சிவமுளை முளைக்கச் செய்கிறான். அது சிவானுபவம் என்ற பயிரை வளர்த்து முடிவிலே பேரின்பம் என்ற பலனை விளைவிக்கிறது. இதுபோல வயலில் நட்ட நாற்று எல்லாம் விளைந்ததாம்.

"கையகலும் மனநிலம் சஞ்சிதக் காடெற்றிக்
கருணைபெருஞ் சிற்பரையேர் பூட்டிப் பூண்ட
மையகல அருட்கொழுவால் உழுதானந்த
வாரிவிட்டுச் சிவவிதையை வித்தி நாளும்
ஐயனெங்கள் ஆறுமுகக் குரு வந்தன்பால்
அனுபூதிப் பயிரிட்டு இன்பம் விளைத்தாற் போல்
செய்யில் நடும் நாற்றெல்லாம் சிலை கொண்டோங்கிச்
செம்பவளம் போல்விளைந்து சிறந்ததன்றே"

என்பது அப்பாடல்.

பள்ளுப்பாடல்கள் பாமரர் மாத்திரம் படித்து இரசிக்க எழுந்தவை என்று. இரசனைத் திறம் வளர்க்க விரும்பும் யாவரும் படிக்கவேண்டிய நூல் பள்ளுப் பிரபந்தங்களாகும்.

# பள்ளுப் பிரபந்தங்கள் 2.

## முக்கூடற் பள்ளு-பருளாய் விநாயகர் பள்ளு.

ஈழத்துப் புலவர் பரம்பரை என்னும் பேராற்றிலே வந்து கலக்கும் முக்கியமான கிளை நதியாக, பிற்காலப் புலவர் பரம்பரைக்கு முதல் மைற்கல்லாக, பெரிய கவிதா மாளிகைக்குப் பொன்பூச் சொரிந்து பொலிந்த செழுந் தாதிறைத்து அழகு பொலிய வாசலிடை நிற்குங் கொன்றை மரமாக விளங்குபவர் சின்னத்தம்பிப் புலவர். அவர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குப் பக்கத் தேயுள்ள சுழிபுரப் பதியிலே உள்ள விநாயகப் பெருமான் மேற்பாடிய நூல்தான் பருளாய் விநாயகர் பள்ளு.

சிறுவயதிலே கல்வியை உதாசீனஞ் செய்து படிப்பிலே கவனஞ் செலுத்தாமல் விளையாட்டிலே விருப்பம் உடையவராய் வாழ்ந்த அவரைத் தந்தையாகிய வில்லவராய முதலியார் திருத்த எவ்வளவோபாடுபட்டும் முடியாதவரானார். இயற்கையிலேயே புலமைப்பேறு பெற்றிருந்த சிறுவன் சின்னத்தம்பி, வடதேயத்து வித்துவான் ஒருவர் ' வில்லவராய முதலியார் வீடு எங்குளது?'' என்று கேட்ட வினுவுக்கு,

பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவராயன் கனக
வாசலிடைக் கொன்றை மரம்;

என்று பாட்டாலேயே விடையளித்தார். இந்தச் செய்தியை அறிந்த தந்தையார் மகனைப் புகழ்ந்து, தான் பாட இருந்த கல்வளை அந்தாதியை மகனையே பாடும்படி பணித்தார். வரகவியாகிய சின்னத்தம்பிப் புலவர் கல்வளை அந்தாதியைப் பாடி முடித்ததோடு, பருளாய் விநாயகர் பள்ளு, மறைசை அந்தாதி, கரவை வேலன் கோவை ஆகிய நூல்களையும் இயற்றி ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் தன்புகழை நிலைநாட்டினர். இவருடைய காலம் 1716க்கும் 1780க்கும் இடைப்பட்டதென்று அறிஞர்கள் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

பருளாய் விநாயகர் பள்ளுக்குச் சிறிதுகாலம் முந்தி 1676க்கும் 1682க்கும் இடைப்பட்ட காலத்தில் முக்கூடற் பள்ளுப் பாடப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கிற் பாயும் பொருநை நதியின் வடபகுதியில் இருக்கும் ஊர் முக்கூடல். அது இப்போது சீவலப் பேரி என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. முக்கூடலில் எழுந்தருளியிருக்கும் அழகர்மேற் பாடப்பெற்ற நூல்தான் முக்கூடற் பள்ளு. சொல்நயமும் பொருள் நயமும் செறிந்து விளங்கும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

முக்கூடற் பள்ளிலும் பருளாய்ப் பள்ளிலும் பிரசித்தமாக விளங்குகின்ற இரு பாடல்களைப் பார்த்துவிட்டு அப்பாற் செல்லலாம்.

ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக்குழைத் தேற்றடைக்குதே-மழை
தேடி யொரு கோடிவானம் பாடியாடுதே
போற்று திரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்வோமே.

முக்கூடற் பள்ளில் உள்ள இப்பாடல் வெகு பிரசித்தமானது. ''நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் வரப்போவது நிச்சயம். மலையாளப் பக்கத்திலும் ஈழக்கரையிலும் பளீச்சுப் பளீச்சென்று மின்னல் மின்னுவதும், காற்றுச் சுழன்று சுழன்று அடிப்பதும், சொறித்தவளை கத்துவதும், நண்டு புற்றடைப்பதும், வானம் பாடி ஆடுவதும் மழைக்குறியின் தோற்றம் அல்லவா? இனி, இதற்கு மேலே என்ன வேண்டும்? வாருங்கள் அந்தச் சந்தோஷத்தைக் கொண்டாட ஆடிப்பாடுவோம்'' என்கிறார்கள் முக்கூடலில் உள்ள பள்ளர்கள். 'கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே' என்ற தொடரும் 'நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே" என்ற வரியும் இக்கவிதையை உயர்த்துகின்றன. பாடல் முழுவதுமே தாளத்துடன் ஆடிப்பாடக்கூடிய நயம் பொருந்தியதாக இருக்கிறது.

இந்த அருமையான பாடலுக்கு - மழைக்குறித் தோற்றத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய பாடல் - மழை பெய்யும் பாடல் பருளாய் விநாயகர் பள்ளிலேதான் இருக்கிறது. இதே கருத்தைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்:

''இந்த மழைக் குறிக்கு ஈழநாட்டிலேதான் மழை பெய்தது; வெளுத்து வாங்கினது. இங்கே சின்னத்தம்பிப் புலவர் இருந்தார். முக்கூடற்பள்ளு மின்னலுக்கு அவருடைய பருளாய் விநாயகர் பள்ளிலே 'சோ' என மாரி பொழிந்தது. அந்த மாரி மழையிலே நனைந்து கொஞ்சம் கொடுகுவோம் வாருங்கள். சுழிபுரப் பக்கத்திலிருந்து மழை வருகின்றது; வந்துவிட்டது:

கருமயில் ஆடக் குயில் இனம் வாடக்
கவி இனம் ஓடக் கரடி புல்வாய்
பொரு புலி ஆளித் திரள் மரை சாரல்
புறமுழை பதறிக் கொடுகிடவே

அருகுழை தவளக் குலமலை தகரத்
தட திகிரியின் முத் துதிர் தரவே
சொரிமலர் அகிலப் பலமரம் முறியச்
சோவென மாரி பொழிந்ததுவே:

"மயில்கள் ஆடுகின்றன; குயில்கள் வாடுகின்றன; குரங்குகள் ஓடுகின்றன; கரடி முதலிய விலங்குகள் கொடுகுகின்றன; குல மலைகள் தகருகின்றன; மூங்கில்களின் முத்துக்கள் உதிருகின்றன; மரங்கள் முறிந்து நொறுங்குகின்றன; 'சோ' வென்று மாரி பொழிகின்றது".

முக்கூடற் பள்ளின் மழைக்குறித் தோற்றத்துக்கு ஏற்றதான சின்னத்தம்பிப் புலவரின் இந்த மழைப்பாடல், மழை பொழியுங் காட்சியை உண்மையாகவே நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. மழைக் குளிருக்குத் தேகம் நடுங்குவதைக் 'கொடுகுதல்' என்று சொல்லுவது தான் வழக்கம். கவிதையில் உயிர்ச் சொல்லான 'கொடுகிடவே' என்பதை விட்டுவிட்டுச் சில பதிப்புக்களிலே 'கிடுகிடவே' எனப் பதிப்பித்திருக்கிறார்கள். இது கவிதையின் உயிரையே போக்கடித்துவிட்டது.

இலங்கை மக்களாகிய எமக்கு ஈழமண்டலத்தின் சிறப்பை எடுத்துக்கூறும் பருளாய்ப் பள்ளு தேசீயச் செல்வம் ஆகும். 'நமது' என்ற ஒரே காரணத்துக்காக-காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சுதான் என்ற காரணத்துக்காக அதை நாம் வியக்கவில்லை; போற்றவில்லை. சின்னத்தம்பிப் புலவரின் கற்பனைகள் சில இடங்களில் நம் நெஞ்சைவிட்டகலாமல் எம்மைத் தன்பால் ஈர்க்கின்றன. ஒரே ஒரு பாடலைப் பார்த்தாலே போதுமானது:

மஞ்சளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள் போல் மடவார் கணஞ்சூழும்
அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை
அன்ன வன்னக் குழாம் விளையாடும்

துஞ்சு மேதி சுருக்கலேச் சீறச்
சுருக்கள் ஓடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே;

பந்தி இராமன் இராவணனை ''இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா'' என்று தண்ணளி அளித்த கம்ப ராமாயணப் பாடல் எல்லோர்க்கும் தெரிந்த பாடல், 'ஆளையாவுனக்க மைந்தன' என்ற பாடலில் ஒரு வாளை மீன் வருகிறது, ஆம். அது வெறுமனே ஒரு துள்ளுத் துள்ளி நாகிளங் கமுகின் மேல் தாவிவிட்டு மறைந்துபோகிறது. ஒட்டக்கூத்தரின் வேருெரு வாளை - வெள்ளத் தடங்காச் சினைவாளை - வேலிக் கமுகின் மீதேறி, துள்ளி, முகிலைக் கிழித்து மழைத் துளியோடு இறங்குகிறது. சின்னத்தம்பிப் புலவரின் சுரு காரணத்தோடு துள்ளுகிறது. வெள்ளத்தோடு ஓடி வரும் அதனை வழிமறித்துப் படுத்திருக்கும் எருமை மலை போலத் தடுக்கிறது. சுரு எருமைக்கு ஒரு குத்துக் குத்து கிறது; எருமை படுத்தபடியே மெல்லிய சீற்றங்கொள் கிறது. எருமையின் சீற்றத்தினுலே பயந்த சுரு துள்ளிப் பாய்கிறது. அது பழுத்த பலாக்கனியைக் கீறிக்கொண்டு மேலெழுந்துஇஞ்சியை வேலியாகஉடைய மஞ்சளிற்போய் விழுகிறது, கம்பரின் வாளை, ஒட்டக்கூத்தரின் வாளை, சின்னத்தம்பிப்புலவரின் கற்பனைக்கு உரத்தைக்கொடுத்து பருளாய்ப் பள்ளிற் துள்ளச் செய்திருக்கிறது. இந்தக் கற்பனை இன்னும் மேலே போய் - வாளைமீன் ஆகாயத் தைத் துளைத்து காமதேனுவின் மடியில் முட்டி அதனுல் அதன் பால் ஒழுகி மழையோடு வந்து பூமியில் விழுந்து பாலாறு என்னும் பெயர் கொண்டு ஓடுவதாகக்கூட மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை பாடியிருக்கிருர்.

மழைக்குறியைப் பார்த்தோம். மழை பெய்த காட்சி யைக் கண்டோம். வாளைமீன் குதித்த கற்பனையை இரசித்தோம். இனிப் பருளாய்ப் பள்ளிலும், முக்கூடற் பள்ளிலும் வரும் சொற்சித்திரத்தையும் சிலேடையை யும் பார்ப்போம்,

பண்ணைக்காரன் பள்ளனைப் பார்த்து "வித்துவகை மாட்டுவகை மேழி ஏர்க்கால் முதலாய்க் கொத்துவகை அத்தனையும் கூட்டி" வரவுஞ் செலவும் கூறும்படி கேட்கிறான். சின்னத்தம்பிப் புலவரது சொற்சித்திரம் பள்ளனது விடையாக அருமையாக அமைந்திருக்கிறது:

'சிந்துரத் துணை புள்ளூர் அயன் பணி
தென் பருளைப் பரஞ்சோதி நாத
தந்தி ஏறிய வாகனந் தின்று
சமைந்த நெற்கோட்டை ஆயிரங்காணும்
வந்த பாவலர் வெங்கலி தீர
வழங்குங் கோட்டை ஓர் ஐந்நூறு காணும்
இந்த நாளினில் என் பொருளாய் வைத்(து)
இருந்ததோர் வட்டுக்கோட்டை யொன்றுண்டே'

என்று சிலேடையாகவும் அழகாகவும் கூறுகிறான் அவன். "பண்ணையாரே! விநாயகரது வாகனமாகிய எலி தின்று முடித்தது ஆயிரங் கோட்டை நெல். புலவர்களது வறுமையைப் போக்சக் கொடுத்தது ஐந்நூறு கோட்டை நெல். எஞ்சி என்ன இருக்கப்போகிறது? எனக்காக ஒரு சிறிய நெற்கோட்டை - வட்டுக்கோட்டை நெல் - நான் வைத்திருக்கிறேன் என்ற பொருளிலும், நெற்கோட்டைகள் ஒன்றும் இல்லை; வட்டுக்கோட்டை என்ற ஊர்ப்பெயரில்தான் ஒரு கோட்டை இருக்கிறது என்ற பொருளிலும் அவன் வட்டுக்கோட்டை என்ற சொல்லை அமைத்துவிடுவதாகப் புலவர் பாடியுள்ள நயம் போற்றி உணரத்தக்கது.

இப்படியே நுகத்தைப்பற்றிக் கூறும்பொழுதில் முக்கூடற் பள்ளன் பின்வருமாறு கூறுகிறான்.

'என் சொல்வேன் நுகம் எண்ணிக்கை நாலுக்
கிருந்த தொன்றுழத் தன்னுகந் தன்னைத்
தினமும் நண்பகல் காணேன் இராத்திரித்
தேடிப்பூரம் அடுக்குங் காணுண்டே'!

என்னிடம் இருந்த மற்றைய நுகங்கள் எல்லாம் போக ஒன்றுதான் இருக்கிறது. அதுவும் பூரநட்சத்திரத்தை அடுத்த மகம் ஆகி இருக்கிறது என்கிறான்; அவனைப் போலவே பருளாய் பள்ளில் வரும் பள்ளனும் விடை பகருகின்றான்:

'இற்றை நாள் நுகம் ஒன்றையும் காண்கிலன்
ஏழு நான்கில் ஒன்றில்லாத நாளில்
மற்றப் பாம்புக்கும் பூரத்துக்கும் பகல்
வைத்த நாணுகம் ஒன்றுண்டே ஆண்டே'

பாம்பு - ஆயிலியம். ஆயிலியத்துக்கும் பூரத்துக்கும் நடுவில் உள்ள நட்சத்திரம் - மகம். மகமாகிய நுகந்தான் ஒன்றுண்டு என்கிறான் இவனும்; இப்படியே கொழுபற்றிப் பேசும் போதும், மாணிக்க வாசகர் பாடிய திருக்கோவையாரிலுள்ள கொழு-தலைப்புக் கருத்துரை வரிகளை ஞாபகமூட்டுகின்றனர் இருவரும்.

இனித் தனித்தனி இரண்டு பள்ளுகளிலும் உள்ள சிறப்பான பாடல் ஒவ்வொன்றைப் பதம்பார்த்துவிட்டாற் போதுமானது.

தொழுவிலே மாட்டுண்டு கிடந்த பள்ளன்மேல் பரிவு கொண்ட மூத்த பள்ளி ஆண்டையிடம் அவனை விட்டுவிடும்படி இரந்து வேண்டுகிறாள்:

'கண்ணில் ஓர் கரம் தீண்டிவிட்டால் அதை
கைவிரல் தறிப்பார்களும் உண்டோ
வண்ணமான முலை விழுந்தால் அவ்
வயிறு தாங்கக் கடனல்லவோ தாங்
அண்ணல் வாரி உலகத்திலே அடி
யாத மாடு படியாத தென்கை
திண்ணந் திண்ணஞ் சிறியோர் செயும் பிழை
சீரியோர் பொறுக்கக் கடனுண்டே'!

பள்ளி தனக்குத் தெரிந்த உவமைகளைக் கையாண்டு நயம்படப் பேசுவது அருமையாக உள்ளது; வண்ணமான

முலை விழுந்தால் அவ்வயிறு தாங்கல் கடனல்லவோ என்ற அநுபவப்பட்ட பள்ளியின் இயற்கையான உவமானம் நெஞ்சைவிட்டகலாத தொன்ருக அமைந்து கிடக்கிறது.

முக்கூடற்பள்ளில் நாட்டுவளம் கூறும் பகுதியில் உள்ள இரண்டு பாட்டிலும் ஆசிரியர் தன் கைவண் ணத்தை நன்கு காட்டியுள்ளார்:

கறை பட்டுள்ளது வெண்கலைத் திங்கள்
கடம்பட்டுள்ளது கம்பத்து வேழம்
சிறைபட்டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட்டுள்ளது நெய்படும் தீபம்
குறைபட்டுள்ளது கம்மியர் அம்மி
குழைபட்டுள்ளது வல்லியங் கொம்பு
மறைபட்டுள்ளது அரும்பொருட் செய்யுள்
வளமை ஆரூர் வடகரை ஆண்டே

என்ற இந்தப் பாடலும் "காயக் கண்டது சூரியகாந்தி" என்ற அடுத்த பாடலும் 1, "கறைப்பட்டுள்ளதிலே" வரும் "மறைபட்டுள்ளது அரும் பொருட் செய்யுள்" என்ற வரிக்கு உதாரணமாக அமைந்தவைபோல ஆழமும் பொரு ளுங் கொண்டு இலங்குகின்றன. "வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன" என்ற நளவெண்பாப் பாடலைப் படி எடுத்துத் தோன்றி "ஒடக்காண்பது பூம்புனல் வெள் ளம் ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்" என்ற குற்ருலக் குறவஞ்சிப் பாடலுக்கு வழி சமைத்துக் கொடுத்து விளங் குகின்றன.

தமிழ்நாட்டில் எழுந்த பள்ளுகளுள் முக்கூடற் பள் ளும் ஈழத்திலே தோன்றிய பள்ளுகளுள் பருளாய் விநா யகர் பள்ளும் கற்பனை நயத்திலும் சொற்செல்வத்திலும் சிறந்து விளங்கிக் கற்ருேர் மனத்தில் அழியா இடம்பெற் றுள்ளன.

○

# பள்ளுப் பிரபந்தங்கள் 3

## கதிரைமலைப் பள்ளு

### தண்டிகைக் கனகராயன் பள்ளு.

ஈழநாட்டின் கண்ணே முதன்முதலாய் எழுந்து மற்றைய பள்ளுப் பிரபந்தங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் மிளிர்வது கதிரமலைப் பள்ளு என்பது ஈழத்தறிஞர் சிலரது முடிபு. ஆனால் முக்கூடற் பள்ளைப் பதிப்பித்தவராகிய திரு மு. அருணாசலம் அவர்கள், அப்பள்ளே முதன் முதல் பாடப்பட்ட பள்ளென நிரூபிக்க முயன்றுள்ளார்: கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து யேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஈழத்தே பாடப்பட்டுள்ள ஞானப்பள்ளு கதிரமலைப் பள்ளிலும் முற்பட்டதெனச் சில தமிழறிஞர் கருதுகின்றனர். முக்கூடற்பள்ளு என்ற நூலுக்கு ஈழகேசரிப் பத்திரிகையில் விமரிசனம் எழுதிய பிரபல எழுத்தாளர் சோ சிவபாதசுந்தரமவர்கள் கதிரைமலைப் பள்ளே எல்லாப் பள்ளுப் பிரபந்தங்களிலும் முந்தியது என்பதை ஆராய்ச்சி பூர்வமாக நிலைநிறுத்த முயன்றுள்ளார்.

திரு. மு. அருணாசலம் அவர்கள் ஆராய்ச்சிப்படி முக்கூடற் பள்ளின் காலம் கி. பி. 1680, ஞானப்பள்ளு போர்த்துக்கேயர் இலங்கையை அரசாண்ட காலத்திற் பாடப்பட்டது. பேரறிஞர் நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசரவர்கள் ஞானப்பள்ளின் காலத்தை கி. பி. 1642 என வரையறை செய்துள்ளார்: இந்நூலில் வரும்

சில வரிகளையும், வசந்தன் கவித்திரட்டில் வரும் சில பாடல்களையும், கதிரைமலைப் பள்ளில் வரும் சில கவிதைகளையும் மேற்கோள் காட்டிச் சிவபாதசுந்தரமவர்கள் தம் சிற்றாராய்ச்சியை நடாத்தியுள்ளார். இக்கால ஆராய்ச்சிகள் இலக்கிய இரசிகர்களுக்குத் தேவையான தொன்றன்று. எனினும் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை ஆராய்வதால் பிற விடயங்களாக நமக்கு எத்தனையோ நன்முத்துக்கள் கிடைக்கலாம்

இக்கதிரைமலைப் பள்ளை எழுதிய ஆசிரியர் இன்னார் என்பதும் அவர் காலம் இன்னதுதான் என்பதும் திட்டமாகத்தெரியவில்லை. இப்பள்ளு கதிர்காமத் தெழுந்தருளிய முருகவேளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்தது. பாரத தேசத்திலும், ஈழநாட்டிலும் மிகப் பக்தி சிரத்தையோடு துதிக்கப்படுகின்ற முருகன், பாட்டுடைத் தலைவனாகலின் இப்பள்ளில் வரும் பள்ளியர் பகீரதா கங்கை நாடு மகாவலி கங்கை நாடு என இரு நாட்டின் வளங்களையும் பாடுகின்றனர்.

பருளாய் விநாயகர் பள்ளில் வரும் மூத்த பள்ளி, ஈழநாட்டைப் புகழ்ந்து, அதன் கல்வித்தரம், கொடைத்திறம் முதலியவற்றைப் பலபடி உயர்த்திக் கூறியதை இரண்டாவது கட்டுரையில் எடுத்துக் காட்டினேன், கதிரைமலைப் பள்ளில் வரும் மூத்த பள்ளியும் எடுத்த எடுப்பிலேயே நாயன்மார்களால் விதந்தோதப்பட்ட 'நீடு புகழ் திருக்கோணமலையையும் திருக்கேதீச்சரத்தையும்' நினைவூட்டுவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

"காசில் பொற் சிலம்பின் சிகரத்தைக்
கால் பறித்தே எறிந்திட வந்த
மாசில் தென்கோண மாமலையைச் சூழும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே"

எனத் திருகோணமலையை உயர்த்திக்கூறுகிறாள். ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் நடந்த போட்டிக் கதையைக் குறிப்பிட்டு, மேருவில் இருந்து வாயு பறித்த மூன்று சிகரங்களில் ஒன்று திருகோணமலை என்று பெருமைப்படக் கூறுகிறாள்.

திருக்கேதீச்சரத்தைப்பற்றிக் கூறும்பொழுது,

"செய்ய கேது தலையற்ற அன்னாள்
திருந்தும் பூசைகள் செய்து முடிப்போன்
வையம் போற்றிட நற்கதி யுற்றிடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே"

என, கேது பூசித்து நற்கதியுற்ற கதையை ஞாபகப்படுத்து கிறாள். ஆனால் இப்பள்ளில் வரும் இளைய பள்ளி பாரத நாட்டைச் சிறப்பித்துக் கூறுவதில் மூத்தவளுக்குச் சிறிதும் சளைத்தவளல்ல என்பதை நிலைநாட்டுகிறாள்: புண்ணிய நகரமாகிய காசியைப்பற்றி அவள் பெருமிதம் தொனிக்கக் கூறுகிறாள்.

வஞ்ச வஞ்சியர் கற்பழித்தோர் மறை
வாணர் ஆருயிர் மாய்த்தவ ரேனும்
செஞ்சொல் வேத விதியால் வருபுனல்
தேவதேவன் திருக்காசி மேவித்
தஞ்சம் நீணதி என்று மனத்துன்னித்
தர்ப்பணம் புரிந்தால் அவர் தங்கள்
பஞ்ச பாதகம் எல்லாம் தொலைத்திடும்
பகீரதா கங்கை நாடெங்கள் நாடே

என்றும், "அதிக பாவிகள் ஆயினும் எவ்வுயிர் ஆயினும் அத்தலத்தில் இறந்தால், கதி தரும் திருக்காசி" என்றும் சிறப்பித்துக் கூறுகிறாள். 'காசியில் இறக்கமுத்தி' என்று நம் நாட்டுள்ளோர் கொண்டுள்ளநம்பிக்கையை நிலைநாட்டு கிறாள்.

கதிரைமலைப் பள்ளின் ஆசிரியர் ஈழம், பாரதம் ஆகிய இரு நாடுகளின் சிறப்பினையும் ஒன்றுக்கொன்று தாழ்ந்து விடாது பாடியுள்ளமை அவரது சமநோக்கைப் புலப்படுத் துகின்றது. முக்கூடற் பள்ளில் வரும் 'மழைக்குறி' க்குச் சரியாக, பருளாய் விநாயகர் பள்ளில் வரும் மழை பெய்யும் காட்சியை முன் கட்டுரையில் காட்டினேன். இவை இரண்டுக்கும் ஈடுகொடுக்கும் படியாகக் கதிரைமலைப்பள்

ளில் நாற்று நடுகை அமைந்திருக்கின்றது. கதிரைமலைப் பள்ளின் ஆசிரியர் பாடியுள்ள நாற்றுநடுகைப் பாடல் ஏழும் சந்தச் சிறப்பில் சிறந்து விளங்குகின்றன. நடுகை நடக்கும் இடத்தின் கலகலப்பை நம்முன் கொண்டுவருகின்றன.

மனதிற் றவமுற் றிருந்த தொண்டரை
வளர்த்துப் பொருள்கள் கொடுப்பவன்
வான் தென் கதிரை மலையில் வேலன்
மாவிலி கங்கை வயலிலே
கனத்த தனத்தி யனத்தின் நடைச்சி
கந்தி சந்தி சுந்தி சீர்
கன்னி பொன்னி யன்ன மென்னி
கமலி யுலகி கமலத்தி
அனத்தி னினங்கள் என்னக்கூடி
அருகிப் பெருகிப் புருவத்தை
அசைத்து நெளித்து நகைத்துக் களித்து
ஆடிப் பாடி நடுகையில்
சினத்து மலங்கு கலங்கு புனலிற்
சிறுத்த கெண்டைகள் சிதறியே
தேரை பாய நாரை பறக்கும்
சித்திரம் பாரும் பள்ளிரே

இப்படி நடுகை நடக்கும் இடத்தில், வாலிப ஆண்களும் வயது வந்த பெண்களும் கூடி நடும் இடத்தில் - காதல் நிகழாமற் போகுமா? அதற்கான காட்சியொன்றை, ஓரிரு கோடுகளில் அற்புதச் சித்திரமொன்றைக் கீறும் கை தேர்ந்த ஓவியன் போல இப்பள்ளின் ஆசிரியர் காட்டுகிறார்.

சேரத் திரண்டு நிரைத்துப் பரந்து
சிரித்துப் புருவம் நெரித்துக் காற்
சிலம்பு புலம்ப வோடிக் கூடிச்
செவ்வையாக நடுகையில்

தாரைப் பொருந்து மார்பிலே யிரு
தனத்திலே குழைக் கனத்திலே
தகைப்பிலே சின்னச் சிரிப்பிலே பள்ளன்
தயங்கிறானடி பள்ளிரே

கதிரைமலைப் பள்ளின் ஆசிரியர் சொற்பஞ்சமில்லாதவர்; பல விடயங்களிலும் அநுபவமுள்ளவர், நெல்லுவகைகளைப்பற்றிக் கூறுமிடத்திலும், வெள்ளத்தில் ஓடும் மீன் வகையைப் பாடுமிடத்திலும், வசிய மருந்து செய்தலைப் பற்றி விளக்குமிடத்திலும் அவரது அநுபவ ஞானத்தைக் கண்டு வியக்கிறோம்;

இப்பள்ளில் உள்ள பாடல்கள் அக்காலந் தொடங்கியே பாமர மக்கள் வாயில் நன்கு பயின்றுவந்துள்ளன நாட்டுப் பாடல்களென இப்போது சேர்க்கப்பட்டுள்ள மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு ஒன்றில்,

காலமே சென்று பாலுங் கறந்து
கமுகம் பூப்போல் அரிசியும் தீட்டிக்
கடுகவே வைத்துக் காய்ச்சிய பாற்கஞ்சி
காலாலே தட்டி யூற்றினா னண்டே

என மூத்த பள்ளி முறையீடாக இப்பள்ளில் வரும் இந்தப் பாடல் சிறிதுபாடபேதத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் அக்காலந்தொட்டு இப்பள்ளு எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது புலனாகும்.

கதிரைமலைப் பள்ளை இரசித்துவிட்டு அப்பால் நோக்கினால் மாவை சின்னக்குட்டிப் புலவர் தண்டிகைக் கனகராயன் பள்ளோடு தோற்றமளிக்கிறார். பெயர் சின்னக்குட்டி என இருந்தாலும் கவிதையில் கெட்டித்தனம் உள்ளவர் என்பதை. இரண்டொன்றை வாசித்தவுடனே தெரிந்துகொள்கிறோம்.

வேளாண்மையை நிலைக்களனாகக் கொண்ட பள்ளுப் பிரபந்தத்துக்கு ஒரு வேளாண் பிரபுவையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளார் இப்புலவர். இவரது காலம் கி. பி.1792க்கு முன்னதாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்;

யாழ்ப்பாணத் தெழுந்த மூன்று பள்ளுகளில் முதலாவதாய கதிரைமலைப் பள்ளு ஈழம் - பாரதம் என நாட்டு வளம் கூறுகிறது; இரண்டாவதாகிய பருளாய் விநாயகர் பள்ளு ஈழமண்டலம் - சோழமண்டலம் என்ற அளவோடு நின்றுவிடுகிறது, இறுதியாய் எழுந்த தண்டிகைக் கனகராயன் பள்ளு ஈழநாட்டையே விட்டு விட்டு வடகாரை, தென்காரை நாட்டுவளம் கூறுகிறது. இதனால் பாட்டுடைத் தலைவனுகிய கனகநாயக முதலிக்கோ அல்லது அவன் முன்னோனான தண்டிகைக் கனகராயமுதலிக்கோ வட, தென் காரை நாடுகளுடன் உள்ள தொடர்பு யாது? என்பதே மேற்படி பள்ளை வாசிப்போர்க்கு எழும் வினவாகும். இந்த வினவுக்கு விடைபோல, இதைப் பதிப்பித்த பதிப்பாசிரியராகிய திரு. வ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் 'வேளாளர் குடியேற்ற ஆராய்ச்சி என அநுபந்தம் எழுதியுள்ளார்கள். இந்த ஆராய்ச்சியை ஈழத்தமிழர் சரித்திரம் அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படித்துப்பார்த்தல் வேண்டும்.

இனி தண்டிகைக் கனகராயன் பள்ளில் உள்ள இலக்கியச் சுவையை நோக்கினால், சின்னக்குட்டிப் புலவர் கதிரைமலைப்பள்ளிலும் பருளாய் விநாயகர் பள்ளிலும் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது புலனாகும். கதிரைமலைப் பள்ளிலுள்ள "தேரை பாய நாரை பறக்கும் சித்திரம்" இவரது மனதையும் ஈர்த்துள்ளது, தென்காரை நாட்டுச் சிறப்பை அவர் வர்ணிக்கையில்,

"ஏற்றைப் பூட்டியே மன்னர் உரப்பிட
எழுந்த வாளை வளைந்து கொழுந்தண்
சேற்றிற் பாவியே நாற்றிற் குதித்திடும்
தென்காரை வளநா டெங்கள் நாடே" எனவும்
"ஏரை மன்னர்கள் பூட்டி உரப்ப
எழுந்த வாளைகள் எங்கும் குதிப்ப
தேரை பாய வெண் நாரைகள் பாய்ந்திடும்
தென் காரைவளநா டெங்கள் நாடே"

என்றும் பாடியுள்ளார்;

சின்னத்தம்பிப் புலவரது 'மழைபெய்தல்' பாட்டாகிய 'கருமயிலாடக் குயிலினம் வாட' என்ற கவிதையைப் போலவே தனது பள்ளிலும் சின்னக்குட்டிப் புலவர் பாட முயன்றுள்ளார்.

படநிரை யரவத் துடனுழை யழுவைப்
பாழ்திரை சிதறிப் பதறவே
தட மழை விகடக் கடகரி திரியச்
சல சல சலெனப் பொழியவே

என்பது அவர் பாடல். சிலேடை பாடுவதிலும், சித்திரக் கவி பாடுவதிலும் ஒரு சொல்லைப் பலபொருளில் வைத்துப் பாடுவதிலும் பாத்திரங்களை அப்படியே மனதில் படும்படி யாக வர்ணிப்பதிலும் சின்னக்குட்டிப் புலவர் தம் கைவண் ணத்தைக் காட்டியுள்ளார். அவர் பண்ணைத் தலைவனைப் பச்சைப்படியாக அப்படியே நம் கண்முன் நிறுத்துவதைப் பாருங்கள்.

சீறு மூக்கும் பருத்திப் பைபோற்
கூடை வயிறும் செவிமிகச்
சிறுத்த கருங்குரங்கு போலக்
கறுத்த முகமும் சீரிலா
நாறு வாயும் தாடியிலஞ்
சாறு மீசையும் பெருத்த
நத்தைக் கண்ணும் நீள்சுரையின்
வித்துப் போன்ற பற்களும்
நீறு போலவே வெளுத்த
தூறு தலையும் வாதஞ் சேர்
நெட்டைக் காலும் குட்டைக் கையும்
ஒட்டற் காது மாகவே
ஏறுமாறுக வலுவாய்க்
கூறு மொழியும் மிக்கதாய்
ஏழைப் பண்ணைக் காரனரு
மெண்ண முன்னந் தோற்றினரே

ஒரு சொல்லைப் பல கருத்துக்கள் படும்படியாக அவர் பாடியுள்ள நல்ல கவிதை பின்வருவது:-

திங்கள் வெண்குடை தங்கும் வரிசிலைச்
சித்த சன்றிகழ் முத்தமிழ் வித்தகன்
கங்கை யங்குல தீபன் பொற்றண்டிகைக்
கனக நாயகன் கார்வரை வஞ்சியர்
பொங்கு கொங்கையும் கந்தர மொக்குமே
புரிகொள் வெண் சங்கும் கந்தர மொக்குமே
அங்க மெங்கு நற் கந்தர மொக்குமே
அழக பாரமும் கந்தர மொக்குமே

கந்தரம் என்ற சொல்லை, மலைமுழைஞ்சு (முலை யிரண்டின் நடு) கழுத்து, கடற்பாசி, மேகம் ஆகிய கருத்துக்கள் வரப் பாடியுள்ளார்.

தமிழ்ப் பேரறிஞரான திரு சு. நடேசபிள்ளையவர்கள் இந்நூலைப்பற்றி 4-12-32ல் வெளிவந்த ஈழகேசரியில் மதிப்புரை எழுதுகையில் ''இலக்கிய அமைதிமட்டில் தண்டிகைக் கனகராயன் பள்ளு பருளாய் விநாயகர் பள்ளு ஒன்றுக்கே தாழும்; ஆயின் சரித்திரக் குறிப்புகளைப் பொறுத்த மட்டில் முன்னையது பின்னையதிலும் முக்கியமானதாம். பருளாய் விநாயகர் பள்ளு கருவிலே திருவுடைய கவிஞன் இயற்றியது. தண்டிகைக் கனகராயன் பள்ளு பாக்கள் புனைவதில் தேர்ச்சி பெற்ற பாவலன் இயற்றியது, சின்னத்தம்பிப் புலவர் தமது பருளாய்ப் பள்ளில் தமது பக்தியைப் பொழிந்திருக்கிறார். சின்னக்குட்டிப் புலவர் தமது தாதாவின் புகழ் விரிக்கவே தமது பள்ளைப் பாடினார். சின்னத்தம்பிப் புலவரது பள்ளு கவி வனப்பினாற் சிறந்து மிளிர்வது. சின்னக்குட்டிப் புலவரது பள்ளு யாழ்ப்பாணச் சரித்திரத்தை விளக்குந் தன்மையால் நமது கவனத்தை ஈர்க்கிறது'' எனச் சரியானபடி குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிய இரசிகர்கள் ஈழத்தெழுந்த இப்பள்ளு நூல்களைப் படித்தல் அவசியமாகும்.

O

# பரணிப் பிரபந்தங்கள் 1.

## தக்க யாகப் பரணி

தமிழிலே பிற்காலத் தெழுந்த தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் பரணிப் பிரபந்தமும் ஒன்ருகும். போர்முகத்திலே ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரன் மேலோ அல்லது யுத்த களத்திலே வீரம் விளைத்த வீரபுருடன் மீதோ பாடப்படுவதுதான் பரணி. பன்னிரு பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் பரணி போன்ற பிரபந்த வகைகளின் இலக்கணம் இத்தகையது என்று வரையறுத்துக் கூறும்.

பரணிப் பிரபந்தங்கள் அரசர் வீரர் என்போர் மீது மாத்திரமல்லாமல் தெய்வங்கள் மீதும், தத்தம் ஆசிரியர் மீதும் பாடப்பட்டுள்ளன. தக்கயாகப் பரணி, கலிங்கத்துப் பரணி, பாசவதைப் பரணி, இரணியவதைப் பரணி, கஞ்சவதைப் பரணி, மோகவதைப் பரணி எனத் தமிழில் எத்தனையோ பரணிகள் உள்ளன. அவற்றுள் தக்கயாகப் பரணி, கலிங்கத்துப் பரணி, பாசவதைப் பரணி என்ற மூன்றுமே புலவர் உலகம் புகழும் பெற்றித்தாய் அமைந்திருக்கின்றன.

பரணி என்னும் பெயர்க் காரணம் பலவாருகக் கூறப்படுகிறது. அவற்றுள் “காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்ற பரணியென்னும் நாண் மீனினுல் வந்த

பெயரே பொருத்தமுடைத்து'' என்ற டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் கூற்றையே பலரும் ஒப்புக்கொள் கின்றனர். பரணிப் பிரபந்தங்களிற் காளியின் சிறப்புக் கூறப்படுவதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும். பர ணிப் பிரபந்தத்துக்கும் மற்றைய பிரபந்தங்களுக்கும் உள்ள பேதத்தை ஒவ்வொருவரும் ஊன்றி அவதானித்தல் வேண்டும். அது என்னவெனில் மற்றைய பிரபந்தங்க ளெல்லாம் பாட்டுடைத் தலைவன் பெயரால் வழங்கும். ஆனால் பரணிப் பிரபந்தமோ தோல்வியுற்றோருடைய பெயருடன் சார்ந்தே வழங்கும். இது இப்பிரபந்தத்துக் குள்ள ஒரு புதுமை.

பரணிப் பிரபந்தங்களெல்லாம் ஒரே அச்சில் வார்த் தவை போலத் தொடங்கி ஒரே தடத்திற் சென்று ஒரே மாதிரித்தான் முடிகின்றன. சிலவற்றில் சிற்சில விசேட அம்சங்கள் இருந்தாலும் அநேகமாக எல்லாவற்றிலும் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோவில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய்முறையீடு, காளிக்குக் கூளி கூறியது, கூழ் காய்ச்சுதல் என்பவை இருந்தே தீரும்,

பள்ளுப் பிரபந்தங்கள் கமத்தொழிலில் மிக ஈடுபா டுடைய பள்ளர் பள்ளியரது இன்ப துன்ப நிகழ்ச்சிகளை கூறுவதனால் வாழ்க்கையோடு தொடர்புடையனவாய் நம்மைக் கவருகின்றன. அப்படிப் பரணிப் பிரபந்தங்க ளுக்குள்ள முக்கிய அம்சம் என்ன? பேய்கள் பற்றியும், காளிபற்றியும் அறிவதனால் எமக்குள்ள இலாபம் யாது? வாழ்க்கையோடு தொடர்பில்லாத வெறும் பொழுது போக்கு இலக்கியமா பரணி? என்ற வினாக்கள் இப்பிர பந்தம்பற்றி எழலாம். இவை நியாயமான கேள்விகள் தாம். பரணிப் பிரபந்தங்கள் ஓரளவு பொழுதுபோக்கு இலக்கியங்கள்தான் என்பதற் கையமில்லை. ஆனால் அவை சரித்திர சம்பந்தமான எத்தனையோ விஷயங்களை நமக்கு விளக்குகின்றன. பாண்டிய சோழ மன்னர்களது மெய்க்

கீர்த்திகளைப் பறை சாற்றுகின்றன. அவை மாத்திரமல்ல தமிழிலுள்ள சொற்செல்வங்கள் பரணிகள்தாம். சொற்கள் வரும் வேகமும் நடையும் அழகும் பரணிப் பிரபந்தங்களைப் போலப் பிறிதொன்றிலுமில்லை. தற்போதைய சொற்பஞ்சமுள்ள கவிஞர்கள் அவசியம் படித்துப்பார்க்க வேண்டிய நூல்கள் பரணிப் பிரபந்தங்களே என்பதற்கு ஐயமில்லை.

''வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் செயங், கொண்டான் விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்'' என்று தனிப் பாடல் ஒன்றில் புலவர் ஆராய்ந்து முடிவு கட்டுகிறார். அவரது முடிவை நாம் ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளலாம் எனவே செயங்கொண்டாரது கலிங்கத்துப் பரணியை அறிமுகம் செய்தபின்பே மற்றப் பரணிகளுக்குச் செல்லவேண்டும் எனினும் அதனைப் பின்பு வைத்துக்கொண்டு இப்போது தக்கயாகப் பரணியை அறிமுகம் செய்யவே விரும்புகிறேன். காரணமென்னவென்றால்; தக்கயாகப் பரணியின் கதை எல்லோருக்கும் தெரிந்த கதை; சிறுவர் முதல் பெரியோர் வரை அறிந்த கதை. அதனாலேதான் அதை முதற்கண் எடுத்துக்கொள்கிறேன். ''தக்கனார் வேள்வித் தவத்தை மேற்கொண்டிருந்தும் தொக்க அறமாயிற்றே சோமேசா'' என்ற சோமேசர் முதுமொழி வெண்பா தக்கன் வேள்வி செய்து அழிந்த கதையை நமக்குச் சுருக்கமாக அறிமுகப் படுத்துகிறது. இக்கதையை அடித்தளமாக வைத்தே தக்கயாகப் பரணி எண்ணூற்றுப் பதினான்கு தாழிசைகளில் விரிவாகப் பாடப்பெற்றிருக்கிறது;

கதை இவ்வளவுதான். தக்கன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை உதாசீனம் செய்து பிரம, விட்டுணு முதலியவர்களையும், தேவர்களையும் முன்வைத்து யாகம் செய்யத் தொடங்குகின்றான். அந்த யாகத்திற்குத் தாட்சாயணி - தக்கன் மகளாகிய உமாதேவி - வருகின்றாள்; அவமானப்படுத்தப்படுகிறாள். அவமதிக்கப்

பட்ட தேவி சினந்து சென்று சிவபெருமானிடம் முறையிட சிவபெருமான் வீரபத்திரக் கடவுளை அழைத்துத் தக்கனது வேள்வியை அழிக்கும்படி கட்டளையிடுகிறார். வீரபத்திரர் பூதகணங்களுடன் சென்று தக்கனையும் அவனைச் சார்ந்த தேவர்களையும் அழிக்க இறந்த தேவர்கள் பேய்களாக மாறுகின்றனர்.

வீரபத்திரரது படையுடன் சென்ற பேயொன்று ஓடி வந்து காளிதேவிக்குத் தக்கன் யாகம் அழிக்கப்பட்ட வரலாற்றைக்கூறி பசிப்பிணியால் வாடும் பேய்களுக்கு நல்ல உணவு கிடைக்கும் என்று கூறுகின்றது. கதையைக் கேட்ட தேவி யாகசாலைக்குச் சென்று கூழ்காய்ச்சும்படி பேய்களுக்கு அநுமதியளிக்க அவைகளும் சென்று பிணங்களைக் கூழாகச் சமைத்துக் காளிக்குப் படைத்துப் பிறகு தாமும் உண்டு இராச ராசனையும் அவன் முன்னோர்களையும் வாழ்த்துகின்றன: சிவபெருமான் அம்பிகையோடு போர்க்களத்துக்கு வந்து அங்கு மாண்டு கிடந்த தேவர்களையெல்லாம் காட்ட அம்பிகை அவர்களுக்கு அருள் புரியவேண்டுமென்று அப்பனை வேண்ட அவரும் அருள் கூர்ந்து தக்கனையும் மற்றவர்களையும் உயிர்பெற்றெழும்படி செய்தருளினார். உயிர்பெற்ற தேவர்கள் வீரபத்திரரை வாழ்த்தித் தத்தம் இடங்களுக்குச் செல்கின்றனர்.

கதைக்குட் கதையாகத் திருஞானசம்பந்தர் சமணரை வென்ற கதையும் கூறப்பட்டிருக்கிறது. கோவிலைப் பாடியது என்ற பகுதியில் இதை நாம் காண்கிறோம். காளி, நாமகளை விழித்து முருகக் கடவுள் ஆளுடைய பிள்ளையாராக அவதரித்துச் சமணரை வென்ற கதையைக் கூறும்படி பணிக்க நாமகள் கூறத் தொடங்கினாள் என நயத்துடன் ஆரம்பமாகிறது கதை.

"வருகதை தெய்வமகளென் மருமகள் வள்ளி வதுவை
மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லு மினிய
ஒருகதை சொல்லுதவள ஒளிவிரி செவ்வி முளரி
ஒளிதிகழ் அல்லி கமழும் ஒருமனை வல்லி எனவே"

எனத் தொடங்கி ஐம்பது பாடல்களில் கதை பாடப்படு கிறது. இக்கதை சைவ மதத்தவர் யாவரும் அறிந்தகதை: சமண சமயத்தவரின் அல்லல் பொறுக்கமாட்டாமல் பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரி யாகிய குலச்சிறையாரும் ஆளுடைய பிள்ளையாரைப் பாண்டியநாட்டுக்கு அழைத்து வந்தனர். சமணர்கள் அவர் இருந்த இடத்துக்கு நெருப்பு வைத்தனர். அந் நெருப்பே பாண்டியனுக்கு வெப்பு நோயைத் தருகிறது: பாண்டியனது நோயைத் திருநீற்றினாலே போக்கிய திரு ஞான சம்பந்தரோடு சமணர்கள் வாதிடுகின்றனர். நெருப்பிலிட்டு ஏட்டை எரியாமலெடுத்தும் வைகை ஆற்றிலே ஏட்டை எதிரேற விடுத்தும் சம்பந்தப் பெருமான் சைவசமயத் துண்மையை நிரூபிக்க சமணர் தாமே கழுவிலேறி உயிர் துறக்கின்றனர். இந் தக் கதைக்குட் கதை இல்லாது விட்டாலும் இப்பரணிப் பிரபந்தம் இனிதே சென்று முடிந்திருக்கும்; ஆனாலும் இப்பரணி ஆசிரியர் சைவ மதத்தின் மேற்கொண்ட பெரு விருப்பே இக்கதையைப் பாடத் தூண்டுதலாய் இருந்தது என்பது ஒருதலை. பிற்காலத்தே அரிய நாடகநூலை- மனோன்மணீயத்தை - இயற்றிய சுந்தரம்பிள்ளை அவர் களும் சிவகாமி சரிதை என்ற அழியாப் புகழ்பெற்ற கதையைக் கதைக்குட் கதையாக அமைத்தது இந்நூலைப் பார்த்துத்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சைவ சமயத்திலுள்ள பல விசேட அம்சங்களையும், அமைத்து தம்மைப் புரந்த அரசனைப் புகழ்ந்து இந்தத் தக்கயாகப் பரணியைப் பாடியவர் கவிச்சக்கரவர்த்தி யாகிய ஒட்டக்கூத்தர். இவர் பிறந்த ஊர் சீர்காழிப்பதி என்று சோழமண்டல சதகம் கூறுகின்றது. எனினும் தண்டியலங்கார மேற்கோட் செய்யுள் ஒன்றினாலும், தமிழ் நாவலர் சரிதையாலும் அவர் பிறந்த ஊர் மலரி என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் ஒட்டக்கூத்தர் சோழ நாட்டிலுள்ள திருவாரூர்ப் பக்கத்தில் இருக்கும் மணங் குடியில் பிறந்தவர் என்றும், கூத்தனூர் என்ற இடத்தில்

வசித்தவர் என்றும், அவரால் கட்டப்பட்ட சரஸ்வதி ஆலயம் ஒன்று இப்போதும் இருப்பதாகவும் 'கவிராட்ச சன்' என்ற நூலாசிரியர் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் விக்கிரம சோழனின் ஆஸ்தானக் கவியாகவும் இரண்டாம் குலோத்துங்க சோழனின் வித்தியா குருவாக வும், இரண்டாம் இராசராச சோழனின் அவைக்களக் கவிச்சக்கரவர்த்தியாகவும் இருந்துள்ளார். இரண்டாம் இராசராசனின் வேண்டுகோட்படி தக்கயாகப் பரணியைப் பாடி முடித்தார். இவர் மூன்று அரசர்கள்மேலும் உலாக்கள் பாடியுள்ளார். இவர் பாடிய நூல்கள் பதினொன்றில் தக்க யாகப் பரணியும் ஒன்று. இரண்டாம் இராசராசன் கி. பி. 1145ல் சிங்காசனம் ஏறியமையால் இந்நூல் அவ்வருடத்திற்குப் பிறகுதான் பாடப்பட்டிருக்க வேண்டும். அதாவது கி. பி. 1146 ஆம் ஆண்டு முதல் கி. பி. 1162 ஆம் வருடத்திற்கிடையில் இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்பது துணிபு. இனித் தக்கயாகப் பரணியாகிய மாளிகையின் உட்சென்று அதன் அமைப்பு, அழகு முதலியவற்றைப் பார்ப்போம்.

கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் இப்பரணி, கடை திறப்பு, காடு பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, கோயிலைப் பாடியது, பேய்முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, கூழ் அடுதலும் இடுதலும் களங்காட்டல், வாழ்த்து என்னும் பதினொரு உறுப்புக்களைக் கொண்டு முடிகிறது. கடவுள் வாழ்த்தில் உமாபாகர், விநாயகர், முருகன், திருஞானசம்பந்தர் என்போர்க்கு வாழ்த்துக்கூறுவதோடு பொதுவாழ்த்தும் இருக்கிறது. பொது வாழ்த்தாக,

இறைவாழி, தரைவாழி, நிரைவாழி, இயல்வாழி,
இசைவாழியே
மறைவாழி, மனுவாழி, திவாழி, ரவிவாழி,
மழைவாழியே

என வாழ்த்துகிறார்: "மதிவாழி, ரவிவாழி மழை வாழியே" என்ற வாழ்த்து சிலப்பதிகாரத்தில் உள்ள "திங்களைப் போற்றுதும்" என்ற மங்கல வாழ்த்துப் பாடலை நினைவுகூரச் செய்கின்றது. திருஞான சம்பந்தர் கதை கதைக்குட் கதையாக வருவதால் அவருக்கும் வாழ் துப்பாடியிருப்பது இங்கு அவதானிக்கத் தக்கது.

வீரபத்திரருடைய வெற்றியைப் பாடுவதற்குப் பல வகை மகளிரைக் கதவு திறக்கும்படி விளிக்கும் கடைத் திறப்பில் அதிக வேலைப்பாடுகள் நயங்களை ஆசிரி யர் காட்டவில்லை. கலிங்கத்துப்பரணி ஆசிரியரின் கடை திறப்போடு இதை நோக்கும்போது இது அவ்வளவு நயம் படவில்லை என்று உடனே புலனாகும். எனினும் இரண் டொரு இடங்களில் ஒட்டக்கூத்தரின் கைவண்ணம் நம் மைக் கவரவே செய்கின்றது.

போய பேரொளி அடைத்து வைத்த பல
புண்டரீகம் இரு பொற்குழைச்
சேய பேரொளி மணிப் பெரும் பிரபை
திறக்க வந்து கடை திறமினோ

அஸ்தமன கிரியில் சூரியன் சென்றடைந்துவிட்டான். அத னால் பல தாமரைப் பூக்கள் கூம்பிவிட்டன. ஆனால் உங்க ளைக் கண்டவுடனே இதழ் விரித்து மலருகின்றனவே காரணம் என்ன? தெரிகிறது, நன்றாகப் புலனாகிறது. நீங்கள் அணிந்திருக்கும் பொற்குழைகளின் ஒளி - பேரொளி - பெரும் பிரமைதான் அவற்றை மலர்விக்கின் றன. அப்படியான பொற்குழைகள் அணிந்த மாதர் களே! கதவுகளைத் திறமின் என்கிறார் புலவர்.

தேவியின் இருப்பிடமாகிய பாலைவனம் காளிகோவி லைச் சுற்றியுள்ள சோலை காளிக்கு நடக்கும் பூசை, பேய் களின் பசி இவற்றை ஓரளவு காட்டிவிட்டு அப்பால் சம் பந்தர் கதைக்கு வருகிறார் ஆசிரியர்.

திரண்ட கலை கூடி நிறை திங்கள் குடையாக நிழல்
செய்ய முறையால்
இரண்டருகும் வாடையொடு தென்றல்
குளிர்தாமரையிரட்டி வரவே

தேவி வீற்றிருக்கிருள், நாமகள் கதையைத் தொடங்கு கிருள்; சம்பந்தர் கொண்ட சினம் என்ன செய்தது என் பதைப் புலவர் கூறுவதைப் பாருங்கள்;

ஆலி வெந்து மந்த்ரம் வெந்தியந்த்ரம்
வெந்தமைந்ததோர்
பீலி வெந்து பாயும் வெந்து
பிண்டியேற மண்டவே

என்கிருர் அவர்; மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை வணங்கி

மன்காதலி லுய்வதிவ் வையமெலாம்
மலையாண் முலையாரமு துண்டவனே!
என் காதல னெம்பெருமா னிவனுக்
கிதுவோதகவென்றனள் என்றலுமே

என் பிராண நாயகருக்கு இப்படியான நோய் வரலாகுமா என்று கேட்டபோது, "சோழ குலத்துக்கு முதல்வஞன சூரியனை ஒத்த உஷ்ணம் உடைய வெப்பு நோய் பாண்டிய குலத்துக்கு முதல்வஞன சந்திரன்போல் குளிர்மை கொண்டு மாறும்" என்று ஞானசம்பந்தப் பெருமான் கூறிபாண்டியன் மாளிகைக்கு எழுந்தருள்கின்ருர். சமணர்கள் இதைக் கண்டு பொருமுகிருர்கள்; அவர்கள் கூறிய சூடான வசவுகள் இவை:-

வருவானொருசோழிய வைதிகனும்
வந்தால் இவன் மாளிகை வாயில் தனில்
வெருவாது புகுந்து தொடப் பெறுமோ?
மீளச் செழியன் திருமேனியையே

கோபத்திற் கேற்ற நடையில் அருமையாக இந்த இடத்தை ஒட்டக்கூத்தப் புலவர் பாடியுள்ளார் என்பது வாசிப்போர்க்குப் புலனாகும்.

இந்தத் தக்கயாகப் பரணியிலே, தக்கன் யாகத்தை அழிக்க வீரபத்திர தேவரோடு சென்ற பூதகணங்களின் செயல்களை வர்ணிப்பதிலேதான் ஒட்டக்கூத்தரின் புலமை நன்கு வெளிப்படுகின்றது. நானூறு பாடல்களுக்கு மேலாகவுள்ள இப்பகுதியில் எந்த இடத்தைத் தொட்டாலும் ஒட்டக்கூத்தரின் பாவன்மையை நாம் உணரலாம்.

எத்தனையோ கடல்கள் எல்லாவற்றையும் குடித்தும் விடாய் தீராத பேய்கள் தயிர்க்கடலைக் குடித்தாவது தாகத்தைத் தீர்த்துக்கொள்ள எண்ணின. ஆனால் தயிர்க் கடலோ காலப் பழைமையாற் புளித்து குடிக்கமுடியாதிருந்தது. பேய்கள் என்ன செய்தன தெரியுமா? அந்தத் தயிர்க் கடலோடு உப்புக்கடலைக் கலந்து கலக்கிக் குடித்தன; ஆனந்தங் கொண்டன.

அப்புளித்தயிர் கடலினுப்புக் கடலடையவே
கொப்புளித்தவை இரண்டுமொன்றுக்கிக் குடித்தவே

இந்தப் பேய்கள் உண்டதற்கோர் அளவில்லை. அவைகள் பொரித்துத்தின்றவை என்ன தெரியுமா? பரசமயத்தெய்வங்கள். பொரித்த இடம் நெய்க்கடல். இப்படியாக உள்ள பகுதிதான் தக்கயாகப் பரணியில் உச்சமானது.

தக்கயாகப் பரணியின் ஆசிரியரான ஒட்டக்கூத்தருக்கு 'ஆரிய மைந்தன் அகத்தியன்' என்று தற்கால ஆராய்ச்சியாளரால் எள்ளி நகையாடப்படும் அகத்தியன் மேல் அளவற்ற பக்தி. தமிழுக்கு வேண்டிய இலக்கணத்தை முதன் முதலளித்தவன் அவனல்லவா? எனவே சந்தர்ப்பம் வாய்க்குந்தோறும் அவன் புகழைப் பாடுவதில் அவர் சளைக்கவில்லை. பொதிகை மலையின் வரையரை மகளிரான தெய்வப் பெண்களே! கதவுகளைத் திறமின்!! என்று

கூறவந்த ஆசிரியருக்கு பொதிகை என்றவுடனே அகத்திய முனிவருடைய ஞாபகம் வருகிறது; அவர் புகழை அழகாகப் பாடுகிறார்;

முடிது மென மறை முதலிய பரவவும்
முறிது மென நிசி சரர்குலம் இரியவும்
முரிது மென வெழு குலகிரி குலையவும்
முளிது மென வெழு புணரிகண் மறுகவும்

மடிது மென மகி தலநிலை தளரவும்
மறிது மென வடி சுரபதி வருடவும்
வரத னொரு தமிழ் முனிவரன் வரவரு
மலய வரையர மகளிர்கள் திறமினோ;

சோழர்களது அவைக்களப் புலவராக ஒட்டக்கூத்தர் இருந்தாலும் பாண்டிய மன்னர்களைப் பாடும் சந்தாப்பம் வந்தபோதும் உயர்வாகவே பாடியுள்ளார், இது அவரது சமநோக்கை நமக்குப் புலப்படுத்துகின்றது. இதுமாத்திரமல்லாமல் வாழ்த்து என்னும் பகுதியில் தம்மை ஆதரித்தவனும் இந்நூலைச் செய்வித்தோனுமாகிய இராச இராச சோழனையும் பிறரையும் வாழ்த்துவதால் அவரது செய்நன்றி மறவாத தன்மையும் விளங்குகின்றது.

மற்றப் பரணிகளுக்கும் இந்தத் தக்க யாகப் பரணிக்கும் உள்ள வேறுபாட்டை இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "மற்றப் பரணிகள் எல்லாம் பாட்டுடைத் தலைவனுக்கு நன்மை உண்டாகவேண்டுமென்று வாழ்த்த இந்தப் பரணி மாத்திரம் ஆக்குவித்தோனுக்கு நன்மை உண்டாகும்படி வாழ்த்துகின்றது. வாழ்த்திலும் சிவபெருமான், விநாயகர், முருகன், திருஞானசம்பந்தர் என்னும் இவர்களை மாத்திரம் வாழ்த்துகிறது. ஆக்குவித்தோனுடைய பேரன்பால் அவனைத் தனியாக இறுதியிலும் வாழ்த்துகிறது. சைவத்தின் ஏற்றம் புலப்படச் சம்பந்தர் கதையைக் கதைக்குட் கதையாக ஆசிரியர் பாடி

யுள்ளதும் ஒரு புதுமை. நூலுறுப்புகளிலும் மற்றையவற்றிலும் பார்க்கச் சிறிது வேறுபாடு காணப்படுகிறது: களங்காட்டுதலைச் சிவபிரான் தேவிக்குக் காட்டியதுபோல் பாடுவதும் வேறுபாடேயாகும்''.

''கி. பி. பத்தாவது நூற்றுண்டிலிருந்து பக்தி, சமூகம் ஆகிய விஷயங்கள் உட்பொருளாய் இலக்கியங்கள் பெருகலாயின. கலம்பகம், பரணி உலா முதலியவற்றை அவைகளின் முன்னோடிகளாகச் சொல்லலாம். கம்பனுடைய மகாகாவியம் என்கிற தேவசந்நிதிக்குச் சுற்றுப்பிரகாரங்கள்தான் இந்த மறுமலர்ச்சி இயக்கங்கள். இப்படி அழகான பிரகாரங்கள் அமைக்கும் திருப்பணியில் ஒட்டக்கூத்தரும் தம்மாலியன்ற கைங்கரியத்தைச் செய்து முடித்திருக்கின்ருர். அவருக்குக் கிட்டியதும் பூரண வெற்றி தான்''. என்று தமிழ்ப் புலமை மிக்க சுவைஞர் ஒருவர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். அது ஓரளவு உண்மை என்பதைத் தக்கயாகப் பரணியைப் படிப்போர் உணர்வர்.

○

# பரணிப் பிரபந்தம் 2

## கலிங்கத்துப் பரணி

தமிழிலுள்ள இலக்கிய நூல்களில் பத்து நூல்களைத் தெரிவு செய்து படிக்க விரும்பும் ஒருவருக்கு நாம் ஓர் அட்டவணை போட்டுக் கொடுத்தால் நிச்சயமாக அவற்றுள் ஒன்ருக கலிங்கத்துப்பரணி இருந்தே தீரும். இல்லாது விட்டால் அது பூர்த்தியான அட்டவணையாகமாட்டாது. ''பரணிக்கோர் சயங்கொண்டான்'' என்று பலராலும் போற்றப்படும் சயங்கொண்டாரது கலிங்கத்துப் பரணி ஒரு கற்கண்டு மலை; எந்த இடத்தைத் தொட்டாலும் இனிக்கும். அது வெறும் சரித்திரக் கல்வெட்டுப் போன்றதன்று. கதைக்குட் கதை கூறி நீட்டி வளர்த்தாமல் அளவோடு பாடப்பட்டிருப்பது அதன் சிறப்புக்கு மற்ருெரு காரணம். ஐந்நூற்றுத் தொண்ணூற்ருறு தாழிசைகளால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணி தான் தமிழில் முதன் முதல் எழுந்த பரணி நூலாகும். இதுவே ஏனைப் பரணி நூல்களுக்கும் மேல் வரிச் சட்டமாக அமைந்துள்ளது.

இக் கலிங்கத்துப் பரணியைப் பாடிய சயங் கொண்டார் முதற் குலோத்துங்க சோழனது அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். கவிச் சக்கரவர்த்தி என்று போற்றப் பட்டவர். பொது நோக்குடையவர். தமிழ் நாவலர் சரிதையாலும், தீபங்குடிப்பத்து என்னும் நூலாலும் இவர் தீபங்குடி என்ற ஊரில் பிறந்தவர் என்று ஊகிக்கப்படுகிறது; இவருடைய காலம் கி. பி. 1070 க்கும் - 1118க்கும்

இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் முடிவுகட்டி இருக்கின்றனர்.

சோழநாட்டை ஆண்டவனும் பேரரசனுகத் திகழ்ந்தவனுமாகிய முதற் குலோத்துங்கனே கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் ஆவான். இவன் மேலைச்சாளுக்கியர், நுளம்பபாண்டியர், பாண்டியர், சேரர், தென்கலிங்கர், வடகலிங்கர் என்போரோடு போர் தொடுத்து வெற்றிபெற்ருன். இவற்றில் வடகலிங்க மன்னவனுகிய அனந்தவன்மனேடு நடத்திய போரே இறுதிப் போராகும். இப்போரில் முதற் குலோத்துங்கனுக்கு படைத் தலைவனுக அமர்ந்து வெற்றியை ஈட்டிக்கொடுத்தவன் கருணுகரத் தொண்டைமான் ஆவான். இப்போரைப்பற்றிப் பாடும் நூல்தான் கலிங்கத்துப் பரணி.

சிவபெருமான், திருமால், பிரமன் முதல் பல கடவுளரையும், சூரியன், மழை கொடி முதலியவற்றையும் வாழ்த்தி அவற்ருேடு உடனே குலோத்துங்கனையும் வாழ்த்திச் செல்லும் கடவுள் வாழ்த்திலேயே இப்பரணி களைகட்டத் தொடங்கிவிடுகிறது. உமாதேவியார் வாழ்த்தை 'ஒருபதச் சோரு'கப் பார்க்கலாம்.

குலோத்துங்கன் பாண்டியனேடும் சேரனேடும் போரிட்டு வென்ருன். பாண்டியன் எதிர்நிற்க முடியாமல் கால்சிவக்க மலைமீதேறி ஓடிவிட்டான். சேரமன்னன் தோற்றுத் தன் திருமுடியிற் சூடியிருந்த மலரைக் குலோத்துங்கனின் பாதங்களிற் போட்டு வணங்கினுன். இப்படிப்பட்ட பெருமையுடைய சோழன் குலோத்துங்கன் வாழ்க என்று' எல்லாத் தெய்வங்கட்கும் முதற் கடவுளாகிய சிவபெருமானது திருமேனியில் ஒரு பாதி கருமையாகும்படி மன்மதன் வில்லை வளைத்து மலர்க்கணையைத் தொடுத்தும் அம்மலர் எவளுடைய பாத தாமரையைக்கூட நெருங்கவில்லையோ அவளின் அடிகளை வணங்குவோம் என்று நயம்படக் கூறுகிருர் ஆசிரியர். மன்மதன் விட்ட மலர் உமையம்மை

யின் திருவடியைக்கூட அணுகவில்லை. ஆனால் சேரமன் னனது முடிமலர் குலோத்துங்கனின் பாதமலரை அணுகி அவனை மேன்மையடையச் செய்தது என்பதுதான் பாட் டிலுள்ள நயமாகும். பாடலைப் பார்ப்போம்:-

செய்ய திரு மேனி ஒரு பாதி கரிதாகத்
தெய்வ முதல் நாயகனை எய்தசிலை மாரன்
கையின் மலர் பாதமலர் மீதுமணு காநம்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை
வைப்பாம்
கறுத்த செழியன் கழல் சிவப்ப வரை ஏறக்
கார்முகம் வளைத்துதியர் கோமகன் முடிக்கண்
பொறுத்த மலர் பாதமலர் மீதணிய நல்கும்
பூழியர் பிரான் அபயன் வாழ்க இனிதென்றே

போர்மேற் சென்ற நாயகர் குறித்த காலத்திற் திரும்பி வராமையால் கோபங்கொண்டு அவர் மகளிர் கதவைத் தாளிட்டுக்கொண்டனர். கலிங்கப் போர்ச் சிறப்பைக் கேட்குமாறும் காலந்தாழ்த்து வந்தமை பொருட்டுத் தம் மைப் பொறுக்குமாறும் வேண்டி, கதவைத் திறக்குமாறு கூறும் பகுதியாகிய கடைதிறப்புத்தான் கலிங்கத்துப் பர ணியின் உச்சமாகும். பெண்களது அங்கவர்ணனை, அழகும் அவர்களது மனோநிலைகளும் தத்ரூபமாகப் படம் பிடிக்கப் பட்டுள்ளன. ஒரு காதலனோடு ஊடல் கொண்ட பெண் ணொருத்தி தனது ஆடையைக் காதலன் பற்றியபோது பொய்க்கோபத்தோடு என்ன சொல்கிறாள்? அவள் அடி மனதிலே இருப்பதென்ன? சயங்கொண்டார் இதைக் கூறுமுகத்தால் எப்படி வெற்றிபெற்றுள்ளார் என்பதைப் பாருங்கள்:-

விடுமின் எங்கள் துகில் விடுமின் என்று முனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமின் என்ற பொருள் விளைய நின்றருள்செய்
பெடைநவீர்! கடைகள் திறமினோ!

என்பதுதான் அது: விடுமின் என்ற சொல் பிடிமின் என்ற பொருளைத் தருகிறதாமே. அதிசயத்திலும் அதிசயம். ஒரு வீட்டிலுள்ள கதவுக்குப் போட்டிருக்கும் குடுமி - குமிழ் - தேய்ந்தே போய்விட்டது. ஏன் தெரியுமா? அவள் அடிக்கொரு தரம் 'அவர் வருவார்' எனத் திறந்து பார்க்கிருள். சிறிது நேரத்தால் அலுப்போடு அடித்துச் சாத்துகிருள். இப்படி விடியுமளவும் செய்கிருள். அதனுல் குடுமி தேய்கிறது; குடுமி தேய்வதோடு அவளின் உயிரும் தேய்வதை - ஊசலாடுவதை - பாடிச் சயங்கொண்டார் தமிழ்ப் புலவருலகத்தையே ஜெயம் கொண்டு விட்டார்.

வருவார் கொழுநர் எனத் திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடிவளவும்
தேயும் கபாடம் திறமினே! என்பது பாட்டு.

அதோ ஒரு பெண், குளத்துக்குப் போய் நீராடிவிட்டு ஒரு செங்கழு நீர்ப் பூவைப் பிடுக்கி அழகாகக் கூந்தலிற் சொருகி அன்ன நடை போட்டு வருகிருள். அவள் அந்தப் பூவைமட்டும் சொருகியதைத்தான் நாங்கள் பார்க்கிறேம். நமக்கு வேறென்றும் தெரியவில்லை, ஆனுல் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் அவள் இந்தப்பூவோடு வேறென்றையும் சொருகி இருப்பதாகக் கூறுகிருர். அதுதான் என்ன?

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் சொருகும் குழல் மடவீர்
செம்பொற் கபாடம் திறமினே!

இவள் கூந்தலுக்குள் அவள் அழகையே பார்த்து இரசித்த "முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் சொருகி" இருப்பதாக அல்லவோ அவர் கூறுகிருர். பதினன்கு பதினைந்து சொற்களுக்குள் எவ்வளவோ காட்சிகளைக் காட்டி நம் உள்ளத்தில் அதை அப்படியே பதிய வைத்துவிடமுடியும் என்பதற்கு இக்கவிதைகள் சாட்சி.

இவைமாத்திரமா? கலவிக் கனவின் மயக்கத்தில் கலைபோயகல, கலைமதியின் நிலவைத் துகிலென்றெடுத்து உடுக்கும் மங்கையையும், ஆளும் கொழுநர் வரவு பார்த்து அவர்தம் வரவு காணாமல் தாளும் மனமும் புறம்பாகக் கதவு சாத்தும் நங்கையையும், தங்குகண் வேல் செய்த புண்களைத் தடமுலைவேது கொண்டொற்றியே செங்கனி வாய் மருந்து ஊட்டும் பெண்ணையும் சந்திக்கிறோம். சந்தோஷமெய்துகிறோம்.

இக் கடைதிறப்பை அடுத்துக் காடு பாடியது என்ற பகுதியில் - பாலை நிலத்தை வர்ணிப்பதில் - ஆசிரியர் தம் திறமையை நன்கு நிரூபித்துள்ளார். "செந்நெருப்பினைத் தகடு செய்து நிலத்தை அமைத்தது போலவும், அந்நெருப்பிலிருந்து எழும்புகைபோலப் புறாக்கள் பறப்பதாகவும், தேவர்கள் இப்பாலை நிலத்தின் வெம்மையைத் தாங்கமாட்டாமல் கார்மேகத்தைத் திரைச் சீலையாக இட்டு, சந்திரனாகிய விசிறிகொண்டு வீசுகிறார்களென்றும் பாடியுள்ளார். இன்னும் நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும் குடிக்குமளவுக்கு விடாய்கொண்டு அலைந்து திரிகிறது ஒரு மான். தண்ணீரே கிடைக்கவில்லை. கடைசியாகத் தனது பகையாகிய செந்நாயின் வாயிலிருந்து வடியும் எச்சில் நீரைக் குடித்து விக்கி நிற்கிறது. அருமையான காட்சி. இந்தஒருபாட்டே பாலைநிலவர்ணனைக்குப்போதும்.

"தீயின் வாயின் நீர் பெறினும் உண்பதோர்
சிந்தை கூர, வாய் வெந்து வந்து செந்
நாயின் வாயின் நீர் தன்னை நீரெனா
நவ்வி வாயினால் நக்கி விக்குமே" என்பது பாடல்.

இனி அப்பாலை நிலத்தை அடுத்துள்ள சுடுகாட்டில் ஒரு கோவில். அந்தக் கோவில் எப்படிக் கட்டப்பட்டிருக்கிறது தெரியுமா? சேரநாட்டு வீரர்களது கொழுப்பாகிய சேற்றை இரத்தமாகிய நீரால் குழைத்துத் தலைகளாகிய கற்களை வைத்துச் சுவர் எழுப்பி யானைகளின் கொம்பு

களைக் கைமரமாக இட்டு அவைகளின் முகப்போர்வை க ளால் மூடிக் கட்டப்பட்டிருக்கிறது. அக்கோவிலில் இருப் பவள் காளி. அவள் முன்னிலையில் வீரர்கள் வணங்குகி ருர்கள். அவர்கள் எப்படி வணங்குகிருர்கள் என்பது வீரத்துக்கே எடுத்துக்காட்டாக உள்ளது.

சலியாத தனி ஆண்மைத் தறுகண் வீரர்
தருக வரம்; வரத்தினுக்குத் தக்கதாகப்
பலியாக உறுப்பரிந்து தருதும் என்று
பரவும் ஒலி கடலொலிபோல் பரக்குமாலோ

இக்காளி தேவியை விட்டு அகலாமல் அவளுக்குத் தொண்டுகள் புரிந்துகொண்டு பல பேய்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு குருட்டுப் பேயையும் ஓர் ஊமைப் பேயை யும் பாருங்கள். அவை ஏன் குருடாகவும் ஊமையாகவும் வந்தன தெரியுமா? முதற் குலோத்துங்க சோழன் சக்க ரக் கோட்டத்தில் தாரவர்மன் என்ற அரசனேடு போ ரிட்டு வென்றுன். அந்தப் போர்க்களத்துக்கு இந்தப் பேய்கள் போய் இரத்தத்தையும் குடல்களையும் சேர்த்துக் கூழ் சமைத்தன, அந்தக்கூழ் தெறித்து ஒரு கண் குரு டாய் விட்டதாம் ஒரு பேய்க்கு. சுவையாகச் சமைத்த கூழை ஆவலோடு சுடச் சுடக் குடித்தமையால் ஒரு பேய் ஊமையாய் விட்டதாம்,

உண்ட கூழொடு நாவும் சுருண்டு புக்
குள் விழுந்தற ஊமைகள் ஆனவும்.

என்கிருர் ஆசிரியர்.

இப்படி அவள் பக்கத்திலிருந்த பேய்கள் எல்லாம் பசி பசி என்று பதறுகின்றன; காற்றடித்தால் பறக்கின்ற பதர்களைப்போலப் பறக்கின்றன. பெரும்பசியால் தங் களுடைய நாக்கில் பாதியையும் உதட்டில் பாதியையுமே தின்று ஒறுவாயாய் விட்டன சிலபேய்கள். ஒரு பேய் தங் களது நிலைமையைக் கூறுகிறது;

பதடிகளாய்க் காற்றடிக்க நிலைநில்லாமல்
பறக்கின்றோம் பசிக்கலைந்து பாதிநாக்கும்
உதடுகளில் பாதியும் தின்று ஒறுவாய் ஆனேம்
உனக்கடிமை அடியேமை ஓடப்பாராய்

அப்போது முதுபேய் ஒன்று ஓடிவந்து வடகலிங்கத்தில் நடந்த தீய சகுனங்களைக் காளிமுன் கூறுகிறது. அப்போது சோதிடப் பேய் நிச்சயம் கலிங்கப் போர் நிகழுமென்று அறுதியிட்டுக் கூறப் பேய்களெல்லாம் அதுகேட்டு ஆரவாரிக்கின்றன. சோதிடப் பேய் சொன்னபடியே கலிங்கப்போர் நடைபெறுகிறது. முதற் குலோத்துங்க சோழன் இரண்டு வருடமாகத் திறை கொடாமலிருந்த வடகலிங்க அரசனுகிய அனந்தவன்மன்மேல் போர்க்கொடி உயர்த்திவிட்டான்; கருணுகரத் தொண்டைமான் படைத் தலைமை தாங்கி போரை நடாத்த வடகலிங்கம் வந்துவிட்டான்; மந்திரிமார்களின் அறவுரைகளையும் கேளாது, 'புயக்குன்றிவை செருத்தொழில் பெறுது நெடுநாள் மெலிவு கொண்டபடி கண்டுமிலையோ' என வெஞ்சினம் கூறி அனந்தவன்மனும் எதிர்த்தான்.

எடும் எடும் எடும் என எடுத்த போர்
இகல் ஒலி கடல் ஒலி இகக்கவே
விடு விடு விடு பரி கரிக்குழாம்
விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே

கடுஞ்சமர் நடந்தது; கலிங்கத்துப் பரணி ஆசிரியரின் போர்ப் பாடல்கள் யுத்தகளத்தை அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் திறத்தன. இறுதியில் கலிங்கர் தோற்று ஓடினர்.

"பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பெங்கே?
போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோள் எங்கே எங்கெ யென்று"
பயிரவியைக் கேட்டுப் பெண்கள் அழுதனர்

எங்கும் இரத்த ஆறு; பிணமலை; கை கால் அற்ற முண்டத்தொகை.

காளியும் பேய்களும் அந்த யுத்த களத்துக்கு வந்து, யானை வயிறுகளால் ஆன பானைகளில், குதிரைகளின் இரத்தத்தை ஊற்றி, கலிங்க வீரர்களது பற்களைத் தகர்த்தெடுத்து, அவற்றை அரிசியாக இட்டு, ஈட்டி அம்பு தடிவேல்களை விறகாக வைத்துக் கூழ் காய்ச்சுகிறார்கள். பிறகு கூழைப் பங்கிட்டு வார்க்கிறார்கள். கொழுப்பாகிய சீலையால் கூழில் கலந்திருக்கும் மயிரை வடிகட்டி சமணப் பேய்க்கு வார்க்கிறார்கள். வாயை மிகுதியாகத் திறந்து அம்மா! பிச்சை போடுங்கள்! என்று கேட்கும் பிராமணப் பேய்க்கும் வேண்டியளவு கொடுக்கிறார்கள். நாம் முன் சொன்ன குருட்டுப் பேயும் ஊமைப் பேயும் கூழ் குடிக்கும் காட்சியை அதி அற்புதமாக ஆசிரியர் வர்ணிக்கிறார்: குருட்டுப் பேயிடம் இருந்த பாத்திரத்தைத் திருட்டுப் பேயொன்று எடுத்து மறைத்து வைத்துவிட்டது. குருட்டுப் பேய் தடவிப் பார்த்தும் பாத்திரம் அகப்படவில்லை, உடனே அது ஓவென வாய்விட்டு கதறி அழத் தொடங்கி விட்டது. அக்குருட்டுப் பேயின் நிலைமை பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

ஊண் ஆதரிக்கும் கள்ளப் பேய்
ஒளித்துக் கொண்ட கலம் தடவிக்
காணாது அரற்றும் குருட்டுப் பேய்
கைக்கே கூழை வாரீரே.

இந்தப் பேய்களுக்குள் ஒரு மூடப்பேய் இருக்கிறது: அதன் மூடத்தனத்தைப் பார்க்கும்போது விலா வெடிக்கச் சிரிக்க வருகிறது. ஒன்றுக்கும் உதவாத ஓட்டைப் பாத்திரத்தில் அது கூழ் வாங்குகிறது. கூழோ விட விட ஒழுகுகிறது. அப்படி ஒழுகுவதை அது ஆராயத் திருப்பிப் பார்க்கிறது. தலைகீழாகப் பாத்திரத்தைக் கவிழ்த்துப் பார்க்கிறது. கூழ் முழுவதும் சிந்திவிட்டது. அது திகைப்புடன் ஒன்றும் பேசாமல் விழிக்கிறது. இப்படிப் பேய்க்குள் இருக்கும் 'மூடப்பேயை' ஆசிரியர் அருமையாகக் காட்டுகிறார்.

பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ்
புறத்தே ஒழுக, மறித்துப் பார்த்து
எல்லாம் கவிழ்த்துத் திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரோ

என்பது பாடல்.

இப்பரணியில் உள்ள ஒவ்வொரு கவிதைக்கும் பொன்னுற் செய்த ஒரு தேங்காயாக குலோத்துங்கன் கொடுத்ததாக ஒரு கதை உண்டு. கதை எப்படி இருந்தாலும் அப்படிப்பட்ட தகுதி சயங்கொண்டார் பெற முற்றிலும் பொருத்தமானவர் என்பதில் ஐயமில்லை,

"கலிங்கத்துப் பரணியில் உள்ள காடு, கோயில், தேவி, முதலியவற்றைப் பார்க்கும்போது சயங்கொண்டார் அவற்றை வர்ணித்திருக்கிருர் என்பதை விட வார்த்திருக்கிருர் என்றுதான் சொல்லவேண்டும். நல்ல நடுநிசியில் உலகம் அனைத்தும் மௌனத்தில் ஆழ்ந்திருக்கும்போது இப்பாடல்களைப் பாடி மனத்தில் நிறுத்தினுல் மனோதிடம் இழந்து பயத்தில் உழன்று வாய் குழற ஏதுவாகிவிடும். கிரேக்க மகா கவிஞர் கோமரைப்பற்றி உயர்வாகச் சொல்லுமிடத்து, "இயற்கை அன்னை நெடிது நாள் கருத்தாங்கி ஒரு கோமரைப் பெற்றெடுத்தாள். அப்பால் மகப்பேறு அற்றுவிட்டாள்" என்று ஒரு விமர்சகர் கூறுகிருர். கலிங்கத்துப் பரணியில் அவதாரம் என்ற பகுதியை நோக்கும் போது சயங்கொண்டாருக்கும் இது பொருந்தும் என்ற நினைப்பு உண்டாகிறது, ஆசிரியருடைய போர் வர்ணனை ஓடுதல். சாடுதல், துள்ளல், துடித்தல், நலிதல், சிதைத்தல் ஆகிய அநுபவங்களை நமக்கூட்டி சந்தநயம் பொருந்தி இருக்கிறது. தேவியைப் பாடுமிடத்தில் மாத்திரம் எளிய சந்தத்தையும் சந்த நெகிழ்ச்சியையும் கைவிட்டுவிட்டார். நூல் முழுவதையும் வாசித்துப் பார்க்கும் ஒருவர் சயங்கொண்டார் கவிச் சக்கரவர்த்தி. சந்தக் குபேர சம்பத்துடையவர் என்ற முடிவுக்கு வருவார் என்பது ஒருதலை" என இலக்கிய இரசிகர் ஒருவர் நயம்பட எழுதியுள்ளார்.

"தமிழ்க் கவி அமுதம்" என்ற நூலிலே வித்துவான் வ. சண்முகசுந்தரம் அவர்கள் கலிங்கத்துப் பரணி பற்றி எழுதியுள்ளது இது:-

"கம்பனுடைய மகாகாவியத்துக்கு முன்னே தோன்றியவற்றுள் கலிங்கத்துப்பரணிக்கு இணையாகக் கவிதை அழகு பொருந்திய நூல் ஒன்றுமே கிடையாது. கலிங்கத்துப்பரணியில் கம்பன் மிகவும் ஈடுபட்டவன் என்பதை அவனுடைய சில போக்குகள் நிரூபிக்கின்றன. கம்பநாடன் என்கின்ற தேவகுமாரன் அவதாரம் செய்யப்போகின்முன் என்பதைக் கட்டியம் கூற வந்தவர்கள்தான் இந்தப் பதிஞேராம் நூற்ருண்டுப் புலவர்கள். அவர்களில் சயங்கொண்டார் முதன்மையானவர். இரண்டு பெரிய மகாயுத்தங்கள் கலிங்க தேசத்தில் நடந்துவிட்டதாகச் சரித்திரம் கணித்துள்ளது. யுத்தத்தில் ஏற்பட்ட சேதங்களும் நாசங்களும் அளவுக்கு மீறியதுதான். ஆனுலும் அந்தக் கெடுதலிலிருந்து இரண்டு பெரிய நன்மைகள் தோன்ருமல் போய் விடவில்லை; ஒன்று அசோகனுடைய சத்திய வாழ்க்கையோடு ஒட்டிய தரும சக்கர ஆட்சி, மற்ருென்று சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி" ○

# பரணிப் பிரபந்தம் 3.

## பாசவதைப் பரணி

தக்கயாகப் பரணியும், கலிங்கத்துப்பரணியும் சமயக் கதையையும் வரலாற்று நிகழ்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. அவைகள் கதையின் நிகழ்ச்சியின் அத்திவாரத்திலே கோபுரங் கட்டப்பெற்றவை. கதையும், நிகழ்ச்சியும் கையிலிருந்தால் - அதுவும் கவிச் சக்கரவர்த்திகளின் கையிற்பட்டால் - அதன் மேல்மாளிகையும், கோபுரமும், வேலைப்பாடும் செய்வது அவர்களுக்குக் கடினமான காரியமன்று. ஆனால் பாசவதைப் பரணியோ அப்படிப்பட்டதன்று கதையையும் ஆசிரியரே ஆக்கி அதன்மேல் வேலைப்பாடுகளையும் செய்வதென்றால் அது இரட்டிப்புக் கஷ்டமான முயற்சி என்பதை நாம் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். கதையும் சாதாரண கதையன்று சமயதத்துவங்களையே உருவகமாக உள்ளடக்கியகதை; எனவே ஆசிரியர் பாத்திரங்களுக்குப் பெயர் வைக்கும்போதும், கதையை நடத்திச் செல்ல ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும் போதும் மிகச் சாவதானமாக - வாளின்மேல் நடந்து செல்பவர்போல - செல்ல வேண்டும். இந்தச் சாதனையைப் பாசவதைப் பரணி ஆசிரியர் திறம்படச் செய்து சமய வாதிகளையும், இலக்கிய நயம் உணர்வோர்களையும் தன் பால் ஈர்த்திருக்கிறார்.

கதையை முதலிற் கவனிப்போம். மாயாபுரத்தில் பாசன் என்னும் பெயரை உடைய அரசன் அரசாட்சி

செய்துகொண்டிருந்தான். இவன் உலகத்திலுள்ள தீமைகள் எல்லாம் சேர்ந்து உருவானவன். இவனுக்கு ஏற்ற மந்திரியாக துன்மதி என்பவன் வாய்த்திருந்தான். படைத்தலைவர்களோ காமன், கோபன், உலோபன், மோகன், அகங்காரகன் என்போர். இவர்கள் நடாத்திய கொடுங்கோல், உலகை எல்லாம் வியாபித்து அழிவுப் பாதையில் சென்றுகொண்டிருந்தது.

இவனை அழிக்க எண்ணிய சிவபெருமான், சிவஞான தேசிகராக அவதரித்து ஞானக்கோலம் பூண்டு ஞான முடிசூடி யோகாசனத்தில் வீற்றிருந்தருளினார்.

அவர் அப்படித் தமக்கு எதிரியாக அவதரித்திருக்கும் செய்தியை ஒற்றரால் அறிந்த பாசன், மந்திரிமாரோடும் சேனைத்தலைவரோடும் யோசனை செய்து அவரை அழிக்க எண்ணினான். சேனைத் தலைவர்களோ தத்தம் பெருமைகளை எல்லாம் எடுத்துரைத்து இந்த அழிவுவேலை மிகச் சுலபமானது என்றுகூற அரசனும் சமயம்பார்த்திருந்தான்.

பாசனது கொடும் ஆட்சியால் துன்பங்கள் பெருகுவதை சிவஞான தேசிகரிடம் அவரது தண்டநாயகர் - ஞானவிநோதர் எடுத்துக் கூறினர். தேசிகர் அவரையே படைத் தலைமைதாங்கி பாசனை அழிக்குமாறு கட்டளையிட்டார்.

ஞான விநோதர் படைநடத்திச் சென்று பாசமன்னனோடு போர்செய்தார். பாசமன்னனது படைத்தலைவர்களாகிய காமன், கோபன் முதலியோர் அழிந்தனர். பாச மன்னன் பின்பும் போரை நிறுத்தவில்லை. ஞானவிநோதரது படைவீரர் அவனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறியும், தம் குருநாதரது பெருமைகளைப் புகன்றும் அவன் யுத்தம் செய்வதை விடவில்லை. இறுதியாக ஞானவிநோதரது திருவடித் தாமரை பெற்ற பின்பே அவன் போர் செய்தலை விடுத்து ஞானநிலை கைவரப் பெற்றான். பின்பு

ஞான விநோதர் தேசிகரைச் சென்று பணிய அவர் ஞான முடிசூட்டி ஞான அரசு செய்யுமாறு பணித்தார். இதுவே கதையின் சுருக்கமாகும்.

இப்பரணியில் கூறப்படும் சிவஞானபாலைய தேசிகர் என்பவர், அம்மவை அம்மையாரின் திருவயிற்றில் அவதரித்து, மயிலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளின் கருணைக்குப் பாத்திரராகி, பாலசித்தர் என்னும் சித்த புருஷர் பால் ஞானோபதேசம் பெற்றவர்; பொம்மபுரத்தில் வீர சைவ ஞானாசிரியராக எழுந்தருளியிருந்தவர். இவர்மீது கற்பனைக் களஞ்சியமான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாலாட்டு, நெஞ்சுவிடுதூது, பிள்ளைத் தமிழ், திருப்பள்ளி எழுச்சி, கலம்பகம் ஆகிய பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

சிவஞான பாலைய தேசிகர் தம்மைச் சார்ந்தவர்களது பாசத்தைப் போக்கி, சிவஞானம் அருளிய செயலை உருவக வகையில் கருப்பொருளாக அமைத்துப் பாடப் பட்டிருக்கும் இப்பாசவதைப் பரணி 737 தாழிசைகளைக் கொண்டது. இது அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பிரபோத சந்திரோதயம் என்பவற்றைப் பின் பற்றியது. அஞ்ஞவதைப் பரணியும் இப்பாசவதைப் பரணியும் கருத்திலும் பாடல்களிலும் இரட்டைக் குழந்தைகள் போல ஒரே தடத்தில் செல்லுகின்றன. இப்பாசவதைப் பரணியைப் பாடியவர் இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாததேசிகர் என்று ஊகிக்கப் படுகின்றது.

இவ்வாசிரியர் கடவுள் வாழ்த்தில் நிட்களசிவம், சகளசிவம், திருமால், பிரமன், விநாயகர், முருகன், சூரியன் என்போரை வாழ்த்துகிறார். அதில் வரும் பிரமன் வாழ்த்து. பொருளிற் சிறந்த தாய் எண்ணுப் பெயர்களோடு தொடர்புபட்டு - இருவினை, முக்குணம், நாற்கதி, ஐம்புலன் என - வருவதும் மீண்டும் மாறிவருவதும் நயம்பட இருக்கிறது; பாடலைப் பார்ப்போம்:-

''இருவினையும் முக்குணமும் நாற்கதியும் ஐம்புலனும்
இயற்று நின்ற
ஒரு வினையும் முகநான்கும் உடையவனை முப்போதும்
உளத்துள் வைப்பாம்
புலமைந்தும் கதிநான்கும் குணமூன்றும் வினைஇரண்டும்
போக ஆண்டு
நிலம் ஐந்தும் தொழவந்த சிவஞான தேசிகன்சீர்
நிலவ வென்றே.

கடவுள் வாழ்த்தை அடுத்துப் பாடப்படும் கடைதிறப்பைப் பற்றிக் கலிங்கத்துப் பரணியில் பேராசிரியர் முத்துசிவன் ஓர் ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளார். கடை திறப்பை ஏன் இரண்டாவது அங்கமாகப் பரணி ஆசிரியர்கள் கொண்டார்கள் என்பதுதான் அது. கதா நாயகன்-நாயகி ஆகிய இரு பாத்திரங்களைக் கொண்ட நூலாக இருந்தால் சிருங்கார ரசத்தை விரித்துவிடலாம். இப் பரணிகள் கதா நாயகனை மாத்திரமே கொண்டவை. பரணிகளின் போக்கிலே எங்காவது காதலுக்குரிய சம்பவம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. எங்கும் போரும் பேயும் பிணமும் நிணமும் தான். போகட்டும். இடையில் எங்காவது கடைதிறப்பை வைத்தால் என்ன? என்று கேட்டால் அது கதைப்போக்கினையும் அதனால் எழும் பயனையும் குலைத்துவிடும். இறுதியில் பாடினால் என்ன? என்று கேட்டால் அற்புதமாக உருவாகிவரும் வீரச் சுவையானது குன்றி குறைந்து, குலைந்தேபோய் விடும். ஆகவே கடை திறப்பினை இரண்டாவதாக வைத்ததே சரியானது. சுருக்கமாகச் சொன்னால் நெஞ்சு பதைக்கும்படியான பயங்கரமான வர்ணனைகள் உள்ள இந்தப் பிரபந்தத்திலே சிருங்கார ரசத்தை ஓரிடத்திலாவது இடம்பெறச் செய்யவேண்டும்; அதற்குத் தகுதியான இடம் முற்பகுதியே என்பதுதான், அவர் முடிபு. அதை நாம் ஏற்றுக்கொண்டாலும், இந்தப் பாசவதைப் பரணிக்கு அவர் முடிபு நூற்றுக்கு நூறு பொருந்தவில்லை என்பதைச் சொல்லித்தானாக வேண்டும். இப் பரணியின் கடைதிறப்பிலுள்ள 45 தாழிசைகளிலும்

சிருங்காரரசத்திலும் பார்க்கச் சமயச்செறிவே மிகுந்து காணப்படுகின்றது. பலவகையான ஞானபக்குவிகளை மகளிராக்கி அவர்களைக் கடைதிறக்குமாறு ஆசிரியர் பாடியுள்ளார். பல வேறு சந்தங்களும் சிலேடைகளும் விரவி இக் கடைதிறப்பு விளங்குகிறது.

"இப் பொருள் மெய்ப் பொருளே என்று குறித்துலகோர்
எழு பிறவிச் சுழலா திவை யலதாய் ஒளிரும்
அப் பொருள் மெய்ப் பொருளே அறிமின் எனப்பகரும்
அருள் வளருந் தகையீர்! அணி கத வந்திறமின்!!

என்ற பாடல்-சமய தத்துவத்தையும், கடவுள் தன்மையையும் ஒருங்கே கூறும் பாடல். கலிங்கத்துப்பரணியின் சிருங்காரரசத்தின் உச்சமான, "இத் துயில் மெய்த்துயிலே என்று குறித்திலேயோர்" என்ற பாட்டைச் சொற்கள் அளவில் படியெடுத்து, பொருள் அளவில் வடதுருவமும் தென்துருவமுமாய் அமைந்திருக்கின்றது.

இனி இப்பாசவதைப் பரணியில் வரும் கடை திறப்புப் பாடலொன்று:-

மண்ணின் மறையாது நிறை வாரி அமிழாது
வாடி எரியாது எரியின் வாத மறையாது
விண்ணின் மறையாது மனமாதி பொறி மேவா
மேலதனை மேவி யணைவீர்! கடைகள் திறமின்!!

என்ற பாடல் மிக மிக அருமையாக உள்ளது. அது அஞ்ஞவதைப் பரணியில் உள்ள "புனலின் அழியாது" என்ற பாடலை ஒத்திருப்பதாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

காடு பாடியதென்பதில் இவ்வாசிரியர், அஞ்ஞானிகள் வாழும் இடமே காடென்றும், அவர்களிற் பலவகையினரே விலங்கென்றும், கோபம் முதலிய துர்க்குணங்களே முள் என்றும் உருவகித்துப் பாடுவது நன்றாக இருக்

கின்றது. ஆசையாகிய மான், வாழ்வாகிய கானல் நீரை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதாக ஆசிரியர் வர்ணிப்பதைப் பாருங்கள்:-

பொய்ந் நீரதெனத் தெரியா தணுகிப்
புணரா சையெனும் பொறிமான் னுகள
மெய்ந்நீ ரதெனச் செலும்வா ழ்வெனுமவ்
வெண்தேர் அடவி வெளி எங்ஙணுமே

இந்தப் பாடலும் அஞ்ஞுவதைப் பரணியில் உள்ள "பேராசை மான் செல்லச் செல்லப் போகும் பேய்த்தேரே எம் மருங்கும் பெருகுங்கானம்" என்ற செய்யுளும் பொருளில் ஒத்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

பின்பு ஆசிரியர் நாய்களை - நாய்க்குணம் படைத்த மனிதர்களை - சித்திரித்துள்ளார்;

ஓடி ஓடி வீடுதோறும் உண்ண உண்ண எண்ணியே
நாடி நாடி வாடுகின்ற ஞமலி கோடி கோடியே

என்பது ஒரு பாடல்.

நற்பயன்களைக் கருதிப்படித்துவிட்டு நற்கதிக்கு வேண்டியன செய்யாமல் வெறும் விதண்டா வாதங்களில் நேரத்தைச் செலவிடும் படித்தமனிதர்களை ஆசிரியர் "நடுங்கவே குரைக்கும் நாய்கள்" என்று நையாண்டி செய்கின்றார். இந்தப் பாடலில் ஈழத்தில் முக்கியமாக யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் வழங்கும் "உலம்பல்" என்ற சொல் கையாளப்பட்டிருப்பதையும் நாம் காண்கின்றோம்.

"ஒடுங்கவே படித்தநூல் உலம்பியே விதண்டையாய்
நடுங்கவே குரைத்து நின்ற ஞமலி கோடி கோடியே"

என்பது அப் பாடல்.

அடுத்துப் பேய்களைப் பாடுகிறார் ஆசிரியர்: அறிவற்றவர்களே பேய்களாக வர்ணிக்கப் படுகின்றனர். பல

வகைச் சமயக் கொள்கைகளும் இப்பகுதியிற் பாடப்பட்டிருக்கின்றன. உலகத்தில்உள்ள பலவகை வஞ்சகச் செயல்களை ஆசிரியர் அழகாக இப்பகுதியில் அமைத்திருக்கிறார். இப்பரணியில் இப்பகுதிதான் மிகவும் நயம் பொருந்திய படைப்பாகப் படைக்கப் பட்டிருக்கிறது. எண்பது தாழிசைகளால் பாடப்பட்டிருக்கும் இப்பகுதியின் நயத்தை ஓரிரு தாழிசைகளால் காட்ட முடியவே முடியாது. ஏமாற்றிப் பணம் வாங்கி தாமேஉண்டுகொழுக்கும் மனிதரை ஆசிரியர் சித்திரிப்பதைப் பாருங்கள்:

வெள்ளை கொண்ட மனத்தினரை மருட்டி மெல்ல
வீட்டுலகம் காட்டுநர் போல் விரகாற் செம் பொன்
கொள்ளை கொண்ட தம்பசியை நீக்க வாங்கிக்
குருக் கொடுக்கும் பேயனந்த கோடி கோடி

மனிதமனத்தை இவ்வாசிரியர் பாடுதலில் பெற்ற வெற்றியை யாரும் பெறவில்லை. தங்களைப் பிறர் புகழும் போது தலை நிமிர்த்தி நடைபழகும் மனிதர் குற்றமற்ற நல்ல மனிதர்களைப் பற்றிக் கூறும்போது குறுகிப்போகிறார்களே என்று பாடுகிறார்.

முற்ற முற்றவும் தம் புகழே சொல முகடு முட்ட
வளர்ந்து முரிப்பன.
குற்றமற்றவர் உற்றவண் பெற்றிகள் கூறுங்காலைக்
குறள்களே யாவன.

எத்தனை உண்மை அது. வீணாக வெற்றுரவாரம் செய்து காலம் கழிக்கும் மாந்தரைப் பார்க்கும்போது.

"பறையிலார் புன்படிறர் பவனிபோய்ப் பார்க்க
வேண்டிப் படரும் பதத்தின
கறையிலார் ஊருத் தாங்கி உலாவுதல் காண்டல்
வேண்டுழிக் கால்முடமாவன"

என விபரிக்கிறார்.

கோயிலைப்பாடியதில் தேவியின் கோயிலிலுள்ள சோலை திருக்கோவில் பெருமை முதலியவற்றையும் தேவியைப் பாடியதில் தேவியின் பெருமை, அவள் பரிசனத்தின் இயல்பு, டாகினி முதலிய அணுக்கத் தொண்டரின் சிறப்பு முதலியவற்றையும் பாடிவிட்டு கூளி கூறியதில் கதை முழுவதையும் விபரித்துக் காட்டுகிருர் ஆசிரியர். 140 தாழிசைகளில் கதை விரிவாகக் கூறப்படுகிறது. மாயா புரத்தின் அமைப்பு, சிவஞான தேசிகர் அவதாரம், பிள்ளைப்பருவம், ஞானக்கோலம், படையெடுப்பு என்பன அதில் பேசப்படுகின்றன.

பாசனது படைத் தலைவர்களில் ஒருவனுன காமன் தன் பெருமையை கூறிக் கொள்கிறுன். தான் சாதாரண ஆளல்ல; சிவனுருக்கு வாளி விட்டவன், திருமால் பிரமன் முதலியோரைத் தன் கணைக்கு இலக்காக்கியவன். அதுமாத் திரமா? இந்திரனைப் பூனையாக்கியும் விட்டேனே! என்று இறுமாப்போடு கூறுகிறுன்.

பொன்னுடாளும் யானை ஒரு
பூனையாகிப் புறம் போத
அந்நாள் ஆண்மை செய்தாரும்
இயலா ரேமற் றியானலனுல்

என்றும்,

சாந்தங் கொண்ட தபோதனரும்
தட மென் முலையார் தம் பிறகே
காந்தங் கொண்ட இரும்பென்னக்
கவ்விச் சுழலக் கலக்குவனுல்

என்றும் வீருப்புப் பேசுகிறுன். இவனை மிஞ்சக் கோபன் சொல்மாரி பொழிவதையும் இந்தப்பகுதியில் நாம் காண் கிறோம்.

அடுத்துவரும் களங்காட்டல் என்னும் பகுதியில் தேவி மோகினிகளுடன் களஞ்சென்று அஞ்ஞானிகள்

ஞானம்பெற்ற வரலாற்றைக் கூறி அவர்களைக் காட்டுதலும், கூழ் என்னும் அதிகாரத்தில் சாந்தி முதலிய மோகினிகள் கூழ் சமைத்துத் தேவிக்குப் படைத்துத் தாமும் உண்டு பல பேய்களுக்குக் கொடுத்தலும் அவை ஞான விநோதரையும் பிறரையும் வாழ்த்துதலும் கூறப்படுகின்றன.

பேய்களுள் வரும் மாயாவாதப் பேயை ஆசிரியர் அருமையாகக் காட்டுகிறார்.

ஆயா சொற்ற சொலுங் கிளிபோல்
அலறிப் பயனை அறியாத
மாயா வாதப் பேய் தனக்கும்
வாரீர் நிறைய வாரீரே

ஒன்றையும் ஆராயாமல் பிறர் சொல்வதையே சொல்லும் கிளிப்பிள்ளைகள். ஆனால் பெரிதாக அலறுவார்கள் மாயாவாதிகள் என்கிறார் ஆசிரியர்.

வீர சைவ நூலாகிய இதில் சித்தாந்த சைவத்தையும் ஆசிரியர் ஓரளவு நையாண்டியாகக் காட்டுகிறார். ஆசிரியர் காட்டும் தூங்கற் பேயையும் பார்த்துவிட்டு நாமும் விலகிக் கொள்ளுவோம்:

இல்லா ததனை உளதென்றே
இருந்திங் கழிந்தே இளைப்பாறச்
சொல்லா ரமுதந் தருகென்னும்
தூங்கற் பேய்க்கும் வாரீரே.

என்பது பாடல்.

பரணிப்பிரபந்தங்களுட் சிறந்தவைகளாக கலிங்கத்துப் பரணி, தக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி என்ற மூன்றும் புலவர் பெருமக்களால் பேசப்பட்டாலும் கலிங்கத்துப் பரணியும், தக்கயாகப்பரணியுமே பெருவழக்காக அறிந்த பரணிகளாகும். இந்தப் பாசவதைப் பரணியைப் பற்றி அறிந்தவர்கள் மிகச்சிலரே. படித்தவர்கள் என்று கூறப்

படுவோரில் அநேகர் அதன் பெயரை மாத்திரம் கேட்டோரேயாவர்; இது என் அனுபவத்தில் அறிந்த உண்மை.

இந்தநூலைத் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் அரிதில் முயன்று தேடி 1932 ஆம் ஆண்டு கலைமகள் பத்திரிகையில் பகுதி பகுதியாக வெளியிட்டார்கள். 1933 ஆம் ஆண்டு கலைமகள் பிரசுரமாக அது வெளிவந்தது.

சமய உண்மைகளை அறிய, மனித மனங்களை ஆழமாக நோக்க, சமயத்தைக் 'கரு' வாக வைத்து நாடகம், நாவல், பிறநூல்கள் ஆக்க இப்பாசவதைப் பரணியைப் படித்தல் நல்லது. சித்தகுமாரன், உயிரிளங்குமரன் நாடகம் முதலிய ஈழத்து நூல்களை இதனோடு ஒட்டி ஆராய்வது ஆராய்ச்சியாளருக்குப் பெருவிருந்தாகும்.

○

# கலம்பகப் பிரபந்தம்

## நந்திக் கலம்பகம் 1.

சிற்றிலக்கியங்களாகப் புலவர்களால் பாடப்பட்டுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுக்குள்ளே உலா, பள்ளு, பரணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, குறவஞ்சி என்பவை பிரசித்தமானவை. அவற்றுள் இலக்கிய இரசிகர்களால் பலபடப் புகழ்ந்து பேசப்படும் நந்திக்கலம்பகம் தமிழ்த்தாயின் நெற்றித்திலகமெனில் அது மிகைப்படக் கூறிய கூற்றன்று.

கலம்பு + அகம் என்ற இரண்டு சொற்களும் சேர்ந்து கலம்பகமாயிற்று. பல பூக்களைச் சேர்த்துத் தொடுத்த மாலையைப் போன்று பலவகையான அகப்பொருள், புறப்பொருட்டுறைகளும் பற்பல பாவும், பாவினங்களும் விரவிவர அந்தாதி முறையில் பாடப்படுவது கலம்பகமாகும்.

தேவர், அரசர் முதலாயினோரைத் தலைவராகக் கொண்டு கலம்பகம் பாடப்படும். நந்திக் கலம்பகம் பல்லவ மன்னனாகிய மூன்றும் நந்திவர்மனைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. அரசர்கட்குப் புனையும் கலம்பகங்கள் தொண்ணூற்றாறு பாடல்களைக் கொண்டதாகவே இருத்தல்வேண்டும் என்பது விதி. ஆனால் நூலிலே நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் இருக்கின்றன. நந்திவர்மன்மீது பல புலவர்கள் பலசந்தர்ப்பங்களிற் பாடிய தனிப் பாடல்களையும் பிற்காலத்தில் இக்கலம்பகத்துள் சேர்த்திருக்கலாமோ என்ற ஐயுறவு தோன்றுகிறது.

இக்கலம்பகத் தலைவனாகிய மூன்றாம் நந்திவர்மன் கி. பி. 825க்கும் கி. பி. 850க்குமிடையில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாடு முழுவதையும் அரசாண்டவன் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் முடிவு கட்டியுள்ளனர். இவன் தெள்ளாறு, பழையாறு தொண்டி, வெள்ளாறு முதலிய போர்க்களங்களில் பகையரசர்களை முறியடித்துப் பெரும் புகழ் கொண்டவன். இம் மன்னனைப் பற்றி அவன் காலத்திலேயே இக்கலம்பகம் பாடப்பட்டது. எனவே இந்நூலும் ஆயிரங்காலப் பழைமை கொண்டு கலம்பகங்களுக்கெல்லாம் முதன்மையானதெனக் கொள்ளக் கிடக்கின்றது.

'நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்பது சோமேசர் முதுமொழி வெண்பாவில் ஒரு வரி: இவ்வரியில் குறிக்கப்படும் கதையைப் பலர் பலவிதமாகக் கூறுவர். நந்தி கலம்பகத் தோற்றமும் சம்பவங்களும் பற்றிய பல புனைந்துரைகளில் பின்வரும் கதையே பலபடப் பேசப்படுகிறது. அது பின்வருவது:-

மூன்றாம் நந்திவர்மன் என்ற அரசனுக்கு நான்கு தம்பியர் இருந்தனர். அவர்கள் மாற்றாந்தாயின் வயிற்றில் பிறந்தோர். அவர்கள் ஒன்று கூடி எதிர்த்தும் நந்திவர்மனை வெல்ல முடியவில்லை. வாளாலே சாதிக்க முடியாத ஒன்றை அத்தம்பியருள் ஒருவன் தமிழாலே சாதிக்க முயன்றான். அவன் தமிழ்ப் புலமை மிக்கவன். எனவே, நந்திவர்மன்மீது கவர்படு பொருளாக, வசைக் குறிப்புகள் தோன்ற, அறம்பாட எண்ணி இக்கலம்பகத்தைப்பாடினான். நந்திவர்மனது அழிவை நோக்கமாகக் கொண்டு பாடப்பட்ட நூலாக இருந்தாலும் தமிழ் இனித்தது; கேட்டோர் வியந்தனர்; பாடல்கள் நாடு முழுவதும் பரவலாயிற்று,

ஒருநாள் இரவு நந்திவர்மன் வீதிவழியாக வரும் போது ஒரு மாளிகையின் மேல் மாடத்திலே பெண்ணொருத்தி இனிய குரலில் அருமையான பாடலொன்றைப் பாடுவதைக் கேட்டான். அசைவற்று நின்று மறுபடியும்

உற்றுக் கேட்டான். அவனைப்பற்றிய பாடல்தான் அது; அவனுக்கு வியப்பு மிகுந்தது. பாடலின் பொருளையும் இசையையும் நன்கு அனுபவித்த அவன் அடுத்தநாள் அப் பாடலைப் பாடிய கணிகையை அழைத்து விசாரித்தான்; அவள்மூலம் அப்பாடல் தனது தம்பியால் இயற்றப்பட்ட தென்றும், அப்பாடல் போன்ற பல பாடல்கள் அடங்கிய ஒரு நூலையே அவன் செய்திருக்கிறன் என்றும் அறிந்தான். அரசன் மகிழ்ச்சியினுல் தன் தம்பியையே அழைத்து நூல் முழுவதையும் பாடிக் காட்டும்படி வேண்டினுன்.

தம்பி தயங்கினுன்; அவற்றைப் பாடமறுத்தான். அப்பாடல்கள் இறப்புக்குரிய பாடல்களே அல்லாமல் சிறப்புக்குரிய பாடல்கள் அல்லவென்றும், பாடல்கள் பாடி முடிந்ததும் மன்னனது உயிர் போய்விடும் என்றும் அச்சுறுத்தினுன். ஆனுல் நந்திவர்மன் அப்பாடல்களுக் காகத் தன் உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருந் தான்;

பச்சை ஓலைகளால் அமைக்கப்பட்ட ஒவ்வொரு பந்த ரிலும் அரசன் அரச கோலத்தோடு வீற்றிருந்து ஒவ்வொரு பாட்டாகக் கேட்டான். ஒவ்வொரு பாடல்களின் முடிவி லும் ஒவ்வொரு பந்தரும் எரிந்து சாம்பராயிற்று; கலம்ப கத்தின் கடைசிப் பாட்டை ஈம விறகடுக்கிய சுடலையில் இருந்து நந்திவர்மன் கேட்டான், தம்பி உருக்கமாகப் பாடினுன்:-

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தயா பரனே"

பாடலில் உள்ள பொருளின்படியே அரசனது தேகத்தையும் செந்தழல் தீண்டி நீருக்கியது; தமிழ்க் கவிதைக்காகத் தன் உயிரையே அர்ப்பணித்த இம்மன்னனைப்பற்றி "கள்ளாரும் செஞ்சொல் கலம்பகமே கொண்டு காயம் விட்ட தெள்ளாறு நந்தி" என்று தொண்டைமண்டல சதகம் புகழ்கிறது.

தமிழ்ச் சுவை மிக்குடைய இக்கலம்பகத்தைப் பாடியவன் நந்திவர்மனது தம்பியே என்று கர்ண பரம்பரைக் கதைமூலம் அறிந்தோம். அவன் பெயர், இந் நூலில் "காடவற்கு முன் தோன்றல்" என்று நந்திவர்மனைக் குறிப்பிடப்படுவதால் காடவராய் இருக்கலாமோ எனச் சிலர் ஐயுறுகின்றனர்.

இனி, நந்திக் கலம்பகத்தில் உள்ள சொற்சுவை, பொருட்சுவை கெழுமிய சில பாடல்களைப் பார்ப்போம். நந்திக் கலம்பகம் என்ற பெயர் சொன்னவுடனே "செந்தழலின் சாற்றை' என்ற பிரபலமான பாடல்தான் நம் மனக்கண்முன் வருகிறது. நந்திவர்மன்மேல் காதல் கொண்ட மங்கை யொருத்தியின் நிலையைச் சித்திரிக்கும் பாடல் அது. காதல் நோயால் வருந்தும் அவளுக்குச் சாந்தி அளிப்பதற்காகச் சந்தனத்தைத் தோழிகள் தடவிவிட்டார்கள். அவளுக்குச் சந்தனம் கூடக் குளிர்மை தரவில்லை, பெரு நெருப்புப் போலச் சுடுகிறது. அவள் சொல்லுகிருள்:-

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனம் என்ருரோ தடவினர் — பைந்தமிழை
ஆய்கின்ற கோன் நந்தி ஆகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்

செந்தழலுக்குச் சாறு என்று இல்லாத பொருளை ஆசிரியர் கூறுகிருர். மிகுந்த வெப்பம் என்பதை அழுத்தமாகக் காட்டுவதற்கு. என் காதல் வெப்பத்தைத் தெரியாத யாரோ ஒரு மூடம் மேலும் வெப்பத்தைப் பூசியிருக்

கிறதே என்ற இகழ்ச்சித் தொனியில் 'யாரோ தடவினுர்' என்ற சொற்களை ஆசிரியர் அழகாகப் போட்டிருக்கிருர். தமிழ் இனிமையுடையது. பொதிகைமலைப் பிறந்ததால் குளிர்மையுடையது. அன்பை அடித்தளமாகக் கொண்டது. பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தியும் இனியனுய், குளிர்மை செய்வோனுய், அறவோனுய், அன்புள்ளத்தனுய்த்தான் இருப்பான். அவன்மேல் காதல் கொண்ட ஏழையின் இதய தாபத்தையும் தீர்ப்பான் என்ற உட்பொருளில் 'பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி' என்ற தொடர் அருமையாக விழுந்திருக்கின்றது. அப்படியே, 'வேகின்ற பாவியேன்' என்பதற்கும் எவ்வளவோ கூறலாம்: ''செந்தழலின் சாற்றை என்று தலைவி சொல்லத் தொடங்கி 'ஆரோ தடவினுர்' என்று முடிக்கும்போது அவள் காதல் நிலையை - விரகதாப நிலையை - இதை விடத் தெட்டத் தெளிவாகக் கூறமுடியுமா? என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்னொரு பெண்ணின் காதல் நிலையைப் பாருங்கள். அன்று இரவு வந்த நிறைநிலா சுடுநெருப்பாகச் சுடுகிறது; அவள் நிலாவைப் பார்த்துக் கூறுகிருள்:-

''மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்கு கரத்
தண்ணுலா மாலைத் தமிழ் நந்தி தன்னுட்டில்
பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வேயிந்த வேகம் உனக் காகாதே''

சந்திரன் பெண் என்று கூடக் கருதாது, பெண்ணின வேதனை தெரியாமல் வருத்துகிறதே. பெண்ணில்லாத ஊரிற் பிறந்து பெண்ணியல்பு அறியாப் பேதையர்போலச் சுடுகிறதே. ஏன் அதற்கு இவ்வளவு வேகம் என்மீது என்ன கோபம்? என்றெல்லாம் தொனிக்க ''பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும் வெண்ணிலாவே'' என்று கூறுகிருள். அருமையான தொடர். இரவில் சந்திரனைக்காணுந்தோறும் நமக்குக்கூடக் கேட்கத்

தோன்றும் எளிய - இனிய - தொடர். 'இந்த வேகம் உனக்காகாதே' என்பதில் எவ்வளவு குழைவு! எவ்வளவு பணிவு!!

இரு பெண்களின் விரகதாப நிலையைப் பார்த்துவிட்டு அப்பால் நோக்கினுல் ஒரு தலைவனது மனோநிலையை அவை களிலும் பார்க்க ஒருபடி தூக்கிக் காட்டும் காட்சியைக் காணுகின்றோம்.

பொருளீட்டச் சென்ற தலைவன் கார்காலம் ஆகிய தால் ஊர் நோக்கி விரைந்து வருகிறான். காலால் நடந் தல்ல. வேகமாகப் பாயும் குதிரைகள் பூட்டிய தேரில் ஓடோடி வருகிறான். ஆனல் அவனது மனவிரைவுக்குத் தக்கதாகத் தேர் ஓடுவதாகத் தெரியவில்லை; அவனுக்கு அது வெறும் ஓடாத தேராகவே படுகிறது. மேலே பார்க் கிறான். அங்கே, வானத்தில் கருமுகில்கள் கடுவேகத்தில் செல்வதைக் காணுகிறான். எனவே தான் வருஞ் செய்தியைத் தலைவியிடஞ் சொல்லி அவளை ஆற்றும்படி வேண்டுகிறான்.

ஓடுகின்ற மேகங்காள், ஓடாத தேரில் வெறும்
கூடு வருகு தென்று கூறுங்கள் – நாடியே
நந்திச் சீராமனுடை நன்னகரில் நன்னுதலைச்
சந்திச் சீராமாகில் தான்

"ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில்" என்ற முரண் தொடைகள் பாட்டின் அழகை மிகுதிப் படுத்துகின்றன. அதுமாத்திரமல்ல - அவன் மனநிலையையும் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன; வெறுங்கூடு என்று அவன் தன்னைத்தானே சுட்டிப் பேசுவது அருமையாக உள்ளது. அவன் மனம் – அவன் உயிர் - அவனை விட்டு எப்போதோ பிரிந்து சென்று அவளை அடைந்து விட்டது: இப்போது அது வெறுங்கூடு. மேகங்கள் போகிறவேகத்தில் தன் தலைவியைச் சந்திக்குமோ என்ற அவநம்பிக்கையில் சந்திச்சீராமாகில் என்கிறான் தலைவன். இம்'மேகவி'டுதூதுப் பாடல் இக்கலம்பகத்திலே உள்ள சிறந்த பாடலாகும்.

தலைவன் தன் உடம்பை வெறுங்கூடு என்று கூறுகிருன். ஒரு தலைவியும் தன் உயிரும் தன் உடம்பைவிட்டு எப்போதோ அவரிடம் போய்விட்டதாகக் கூறுகிருள். அவர் ஒருவர் நாம் ஒருவராய் ஆகிவிட்ட பிறகு - வெவ்வேறிடங்களில் தனித்திருக்கும் நிலை வந்துவிட்ட பிறகு-உயிர் உடம்பில் இருக்கிறதென்று கூறமுடிமா? மனமறிந்த தோழியிடம் அவள் கூறுவதைப் பாருங்கள்:

மங்கையர் கண் புனல் பொழிய
மழை பொழியுங் காலம்
மாரவேள் சிலை குனிக்க
மயில் குனிக்குங் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும்
பொன் சொரியுங் காலம்
கோகனக நகை முல்லை
முகை நகைக்குங் காலம்
செங்கை முகில் அனைய கொடைச்
செம்பொன் செய் ஏகக்
தியாகி எனும் நந்தி யருள்
சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும்
ஆன மழைக் காலம்
அவரொருவர் நாம் ஒருவர்
ஆன மழைக் காலம்.

என்பது பாடல்.

இசைப் பொலிவோடு இப் பாடலைத் தனிமையில் இருந்து பொருள் அறிந்து பாடிப் பாருங்கள். இலக்கியத் தேன் சொட்டும், வாழ்க்கை முழுவதும் பாடிக்கொண்டேயிருக்கலாம்.

தலைவி இரங்கலும் தலைவன் துயரமுமாக - ஒரே காதலாக - இருக்கிறதே. வேறு சுவைகளே இக்கலம்ப

கத்தில் இல்லேயோ என்று பலர் நினைக்கலாம். வீரச்சுவை யும் நகைச்சுவையும் வேண்டிய மட்டும் உண்டு; ஒரு நகைச்சுவைக் காட்சியைப் பார்ப்போம்:-

பரத்தைபால் சென்ற தலைவன் பலநாட்களாக இல்லம் திரும்பாமையால் தலைவி சினம் கொண்டிருக்கிருள். அவள் சினத்தைத் தவிர்ப்பதற்காகத் தலைவன் தன்னுடன் திரி கின்ற பாணனைத் தூதனுப்புகிருன். பாணன் தலைவியிடம் வந்து அவளை மகிழ்விக்க எண்ணித் தலைவன் சிறப்பைப் பாட்டாகப் பாடுகிருன். தலைவியோ பாண! உன் பாடலை நிறுத்து; முன் ஒருகால் நீ பரத்தையர் வீட்டில் இருந்து பாடியதை எங்கள் வீட்டில் எல்லோரும் கேட்டோம்; கேட்டு என்ன எண்ணிேேம் தெரியுமா?

ஈட்டு புகழ் நந்தி பாண! நீ எங்கையர் நம்
வீட்டிருந்து பாட விடிவளவும் — காட்டிலழும்
பேயென்ருள் அன்னை, பிறர் நரியென்ருர், தோழி
நாயென்ருள்; நீயென்றேன் நான்

உன் பாட்டைக் கேட்டுத் தாய் பேய் அழுகிறதென்று கூறிவிட்டாள். மற்றவர்கள் நரி ஊளையிடுகிறது என்ருர் கள். தோழியோ நாய் குரைக்கிறது என்று முடிவு கட்டி ளுள். ஆனல் நானே உன் பாட்டுத்தான் என்று உறுதி யாகக் கூறிவிட்டேன் என்கிருள் தலைவி. எப்படி நாசூக்காகக் கேலி செய்கிருள் அவள். 'வாய்த்த திரு நாகை வாகான தேவடியாள்' என்ற காளமேகப் புலவரின் நகைச்சுவைப் பாடலையும், இப் பாடலையும் ஒப்புநோக்கிப் பார்த்தால் இரசமாயிருக்கும்.

பிரிவுத் துன்பத்தையும். வீரத்தின் எல்லையையும், நகைச்சுவைக் காட்சியையும் பார்த்துவிட்டோம். இனி இக்கலம்பக ஆசிரியர் காட்டும் பக்திப் பாடலையும் பார்ப் போமா?

மூன்றும் நந்திவர்மப் பல்லவன் சிவபெருமானிடம் நீங்காத பக்தியுள்ளவன்: ஆசிரியரும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் துதியோடு நூலைத் தொடங்குகிறார், முதற் பாடலிலேயே ஆசிரியர் தம் கைவண்ணம் முழுவதையும் காட்டி களைகட்டச் செய்துவிடுகிறார்.

"மண்டலமாய் அம்பரமாய்
மாருதமாய் வார்புனலாய்
ஒண் சுடராய் ஒளி என்னும்
ஓர் உருவம் மூன்றுருவ
மைவடிவோ வளைவடிவோ
மரகதத்தின் திகழ் வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ
சிவனே நின் திருமேனி
இலகொளிய மூவிலை வேல்
இறைவா நின் இயற்கயிலைக்
குலகிரியும் அருமறையும்
குளிர் விசும்பும் வறிதாக
அலைகதிர் வேற் படை நந்தி
அவனிநா ராயணன் இவ்
வுலகுடையான் திருமுடியும்
உள்ளமுமே உவந்தனையே"

வீசிகையிற் கொன்றையும் வெள் எருக்கும் விராய்த் தொடுத்த; வாசிகையின் ஊடே வெண்மதிக் கொழுந்தைச் சொருகினையே என்றெல்லாம் பாடி முழு உருவமாக - மனதில் நீங்காத சித்திரமாக நிறைத்துவிடுகிறார்: இந்தத் துதிப்பாடல் மாத்திரமன்று: "பொருப்பரையன் மடப்பாவை புணர் முலையின் முகடுதைத்த நெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரை மார்ப" என்றெல்லாம் முக்கண்ணனின் புகழை நன்கு பாடியுள்ளார்.

இறுதியாக பலரும் அற்புதம் என்று புகழும் இந்த நந்திக் கலம்பகம் பற்றி இலக்கியச் செல்வர் ஒருவர் எழுதியிருப்பது நோக்கத்தக்கது.

"நந்திக் கலம்பகத்தின் ஆசிரியருடைய கவிதைகளில் பெரும்பாலானவை இவை போன்ற அற்புத சிருஷ்டிகளே. அநேக கவிதைகளின் இயல்புகள் தமிழுக்கே புதியனவாக இருக்கின்றன. இதயப் பண்பிலும் கவித்துவத் திறமையிலும் இவரைப்போன்று சிறந்து விளங்கும் கவிஞர்களைக் காண்பது அபூர்வம். தமிழ் நாட்டில், கம்பரையும், பாரதியையும், முத்தொள்ளாயிர ஆசிரியரையும் ஜயங்கொண்டாரையும் தவிர்ந்து மற்ற எந்தக் கவிஞரையும் மிஞ்சிவிடக் கூடியவர் நந்திக் கலம்பக ஆசிரியர்... இவருடைய நூலிலும் சில இடைச்செருகல்கள் இடம் பெற்றுவிட்டன. பல அறிஞர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து பதிப்பித்தால் தவறுகள் இல்லாத ஒரு சிறந்த பதிப்பு தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடும்."

○

# கலம்பகப் பிரபந்தம்

## மதுரைக் கலம்பகம் 2.

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது மதுரைக் கலம்பகமாகும். இம்மதுரைக் கலம்பகத்தில் சொக்கநாதர்மேல் காதல்கொண்டு வருந்தும் தலைவியின் இயல்புகளும் இவளை அணையவரல் வேண்டும் மாலைதரல் வேண்டும் இவள் இறந்தால் பழி உம்மையே சேரும் எனப் பாங்கியும் செவிலியும் கூறும் அகத்திணைப் பாடல்களும் பிறபுறத்திணைப் பாடல்களுமாக நூறு பாடல்கள் அமைந்திருக்கின்றன.

இற்றைக்குச் சற்றேறக் குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த குமரகுருபர சுவாமிகளால் இக்கலம்பகம் இயற்றப்பட்டது. தென்பாண்டிநாட்டில், நெல்லை மாவட்டத்தில் ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் பிறந்து ஐந்து வயது வரும் வரைக்கும் ஊமையாய் இருந்த குமரகுருபரர், திருச்செந்தூர் முருகனுடைய அருள்பெற்றுப் பாடத் தொடங்கினர். கற்கண்டோ, தேனோ, கனிரசமோ என்று சொல்லக்கூடிய சொற்களினால் பக்திச் சுவை சொட்ட மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அவர் பாடி மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரது முன்னிலையில் அரங்கேற்றினர். 'தொடுக்குங் கடவுள் பழப்பாடல் தொடையின் பயனே' என்ற நறும் பாடல் அதில் பிரசித்தமானது. அக்காலத்திலேதான் மீனாட்சியம்மை

குறம், இரட்டைமணி மாலை, மதுரைக்கலம்பகம், நீதி நெறி விளக்கம் என்ற நூல்களும் அவரால் பாடப்பட்டன. பின்பு குமரகுருபரர் தருமபுர மடம் சேர்ந்து மாசிலாமணித் தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றார்; காசிமாநகர் சென்று மடம் ஒன்று தாபிக்க விரும்பிய அவர் இந்துஸ்தான் மொழி அறிவு கைவரப் பெறுவதற்காகக் கலைமகளை வேண்டிச் சகலகலாவல்லி மாலை பாடினார். பின்பு அம் மொழியால் தன் கருத்தை அறிவித்து பாதுஷா மன்னரிடம் நிலம்பெற்றுக் காசியில் மடம் ஒன்றைத் தாபித்தார், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சிவகாமியம்மை இரட்டைமணி மாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை, பண்டார மும்மணிக்கோவை என்பனவும் அவர் இயற்றிய நூல்களேயாம், எனினும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை என்ற மூன்றும் பெருவழக்குடையதாய் புலவர் புகழும் பெருமையுடையதாய் இன்றும் கற்றோரால் களிபேருவகையுடன் படிக்கப்படுவதாய் நின்று நிலவுகின்றன.

இனி இந்த மதுரைக் கலம்பகத்துள் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய சில பாடல்களைப் பார்ப்போம்.

தலைவனைப் பிரிந்து பிரிவாற்றாமையால் வருந்துகின்றாள் தலைவி. அவளுக்குப் பாலும் கசந்து, படுக்கை நொந்து, உடம்பு மெலிந்து உயிர் இருக்கிறதோ இல்லையோ என்ற நிலை அந்த நிலையிலிருந்து அவள் மீண்டும் தெம்புபெற வேண்டுமானால் தலைவன் வந்துதான் ஆக வேண்டும். இல்லையெனில் அவன் மாலையையாவது தந்துதவ வேண்டும். தலைவர் - சொக்கநாதர் - அதைக் கூடத் தந்தருளுகின்றாரில்லை. ஐயோ இனி இவளைப் பிழைக்கவைக்க நான் என்ன செய்யப் போகிறேன் என்று கதறுகிறாள் செவிலித்தாய்.

அப்பாலும் செவிலித்தாய் சொல்லுகிருள். நான் இதுவரை இவள் உயிரை வருத்தும் இயமன் ஒருவன்தான் என்று இருந்தேன். ஆனுல் இன்று கூற்று ஒன்று அல்ல; ஒரு கோடி என்பதைத் தெரிந்து கொண்டேன். இளம் பிறை, தென்றற் காற்று, கரிய கடல் என்று ஒரு கோடி. இவ்வளவும் யமன்போல இவளது உயிரை எடுத்துவிட்டன. இவளது உடம்புதான் எஞ்சியிருக்கிறது. உயிரே இல்லை.

மாற்று ஒன்றிலை என் மருந்துக் கந்தோ!
    சொக்கர் மாலை கொடார்
கூற்று ஒன்றல; ஒரு கோடி; கெட்டேன்
    கொழுந் தொன்று தென்றற்
காற்று ஒன்று இளம்பிறைக் கீற்ருென்று
    கார்க் கடலொன்று கண்ணீர்
ஊற்று ஒன்று இவளுக்கு உயிரொன்
    றிலை உண்டு உடம்பொன்றுமே.

அந்தோ, கெட்டேன் என்ற இரங்கற் சொற்கள் செவிலித்தாயின் மனோநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. உயிரில்லாத உடம்பொன்ருேடு யுத்தம்செய்ய-வருத்த - ஒரு கோடி கூற்றுவர் வந்துவிட்டார்களே என்று இகழ்ச்சிக் குறிப்பிலும் அவள் பேசுகிருள். இவளுக்கு 'உயிரொன்றிலை, உண்டு உடம்பொன்று' என்ற வரிகளில் இல்லை உண்டு என்ற முரண் தொடைகள் பாட்டின் அழகை மிகுதிப்படுத்துகின்றன. தன் மகளை - தலைவியை - செவிலி என் மருந்து என அருமையாகக் குறிப்பிட்டு அவளுயிர் போகாமல் இருக்க சொக்கர்மாலையாகிய மருந்து தேவை என்கிருள். மருந்துக்கு மருந்து தேவை என்பது எவ்வளவு அழகாக இருக்கிறது.

சிவபெருமான் வளையல் விற்கும் செட்டியாராக வந்து திருவிளையாடல் புரிந்த கதை திருவிளையாடற் புராணத்துள் இருக்கிறது. இந்தக் கதையை வைத்துக்கொண்டு

அருமையான பாடல் ஒன்றைக் குமரகுருபரர் இக்கலம்பகத்துள் பாடியிருக்கிருர். மதுரைமா நகரத்திலே அழகிய வளையல் செட்டியாராக வந்து வளையல் விற்றீரே. உம் மைக்கண்டு காதல் மயக்கங் கொண்ட பெண்களின் கைகள் மெலிவதனுலே அவர்கள் கைகளில் உள்ள வளையல்கள் எல்லாம் கழன்று விழுந்தனவே. அவற்றை எல்லாம் பெற்றுக்கொள்வதற்காகத் தான் நீர் புறப்பட்டீரல்லாமல் விற்பதற்காகப் புறப்பட்டீர் அல்லீர் என்கிருர் அவர்:

வலங்கொண்ட மழு உடையீர் வளைகொண்டு
விற்பீர்போல் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங் கொள்ளை கொள்கின்றீரால்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்தது
நன்றுனீர் இப் பாவைமார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட்டீரே.

இக்கலம்பகத்தில் உள்ள அருமையான பாடல்களில் இது ஒன்று:

தோழியரே! இந்த ஊரில் சற்றும் நீதியென்பதே கிடையாதுபோலிருக்கிறதே; இனியும் இந்த ஊரில் நாம் இருக்க முடியாது என்றெல்லாம் ஒரு தலைவி பேசுகிருள். அப்படி அவள் கண்ட அநியாயம்தான் என்ன? கடம்பவனநாதர் - என் தலைவர் - என் கண்வழியாகப் புகுந்து கருத்துள்ளே நிறைந்து இருவரும் ஒன்ருயிருக்கும் இந்த நிலையிலும் பிறையாகிய எமன் என்னை வருத்துகிருனே. அப்படியானுல் தங்கள் நாயகரைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியர் என்ன பாடு படுவார்கள்? என்பதுதான் அவள் கேள்வி.

தனி இருப்பவர் என்படுவார் கெட்டேன்
சற்றும் நீதி ஒன்றற்ற இவ்வூரில் யாம்
இனி இருப்பது ஒண்ணுது மடந்தையீர்
இடமருங்கும் சடைமருங்கும் இரு
கனி இருக்கும் கடம்பவ னேசனுர்
கண்புகுந் தென் கருத்துள் இருக்கவும்
பனி இருக்கும் பிறைக் கூற்றம் முற்றியென்
பாவி ஆவியை வாய்மடுத் துண்பதே.

தலைவியின் விரகதாபம் ஒவ்வொரு வார்த்தையிலும் புலப்படுகிறது. 'தனியிருப்பவர் என்படுவபர் கெட்டேன்' என்று படிக்கத் தொடங்கியவுடனே சோகம் ஓலமிட்டு முத்தாய்ப்பு வைக்கிறது. பிறையாகிய கூற்றம் என் உயிரை ஒரேயடியாகக் கொண்டு போகாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துத் தின்கிறதே என்கிருள் தலைவி. "பிறைக் கூற்றம் முற்றி என் பாவி ஆவியை வாய்மடுத்துண்பதே" என்பது அருமையான தொடர். ஒரு காலத்தில் சந்திரன் செருக்குக் கொள்ளச் சிவபெருமான் அவனைத் தேய்த்து அவன் செருக்கை அடக்கினுர் என்பது கதை. அப்படிப்பட்ட கடவுள் என்னேடிருக்கவும் பிறை அஞ்சாது என்னைக் கொல்லுகின்றதே என்கிருள் தலைவி. தலைவி தன்னைப்பற்றி நினைப்பதோடு மாத்திரம் நில்லாமல் - தன்னிலும் பார்க்க அவல நிலையிலிருக்கும் தனி இருப்பவரைப்பற்றி நினைப்பது சோகத்தின் உச்சியை எட்டுகிறது. கவிதைக்குரிய எளிமை, தெளிவு, ஆழம் என்னும் மூன்றுமுடைய நல்ல பாடல் இது.

காதல் பரத்தையிடம் சென்று தங்கிய தலைவன் தலைவியைச் சமாதானப் படுத்த விரும்பிப் பாணனைத் தூதாக விட்டான். பாணன் தலைவனின் புகழைப் பாடினுன். தலைவி அவன் பாட்டைக் கேட்டு 'ஈட்டுபுகழ் நந்தி பாண' உன் பாட்டு நாய்குரைப்பதிலும் பேய் அலறுவதிலும் நன்ருயிருக்கிறதென்று நகைச்சுவை தோன்றக் கூறினுள் என நந்திக் கலம்பகத்துள் பார்த்தோம். இக்கலம்பகத்

துள் அதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கதையோடு ஒட்டிக் குமரகுருபரர் பாடுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டிலேயுள்ள மணிமுத்தா நதியில் சிவபெருமான் கொடுத்த பொன்னைப் போட்டுவிட்டுத் திருவாரூரிலே உள்ள குளத்திலே அதனை எடுத்தார் என்பது பெரிய புராணக்கதை. அதைப் போலத் தலைவனைப் பரத்தையர்பால் இருக்க விட்டு விட்டு என் வீட்டில் வந்து அவர் இருக்கிறாரா? என்று கேட்கிறாயே. உன் புத்தி இருந்த வாறென்ன? என்று கேட்கிறாள் தலைவி.

கொங்குரை ஆற்றிலிட்டுக்
குளத்தினில் தேட நீடு
மங்குல்தோய் முதுகுன் றையர்
மதுரையோ? மதியில் பாணு!
வெங்கையர் மனைக்கண் வைத்தாங்கு
மெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே
மகிழ்நர்தம் வாழ்க்கைதானே.

சரியான சந்தர்ப்பங்களில் புராணக் கதைகள் மூலம் விடயத்தை விளக்குவதிலும் புராணக் கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் குமரகுருபரர் மற்றெல்லோரையும்விட ஒருபடி விஞ்சியே நிற்கிறார்,

தமிழ் வளர்த்த மதுரையம்பதியிலே தமிழ் தந்த சொக்கநாதருக்குத் தமிழ்க் குழந்தை முருகனிடம் அருள் பெற்ற குமரகுருபரர் பாடிய கலம்பகமல்லவா? எனவே தமிழ் என்றவுடனே அதன் அழகு, செழுமை, பெருமை எல்லாம் தோன்ற அவர் பாடி இனிமை செய்கிறார். தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனே நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே" என்றெல்லாம் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வாய் குளிர - மனங்குளிர - நெஞ்சு இனிக்கப் பாடியவரல்லவா?

அப்படியே இக்கலம்பகத்துள்ளும் தமிழின் பெருமையை வாயாரத் தேன் தமிழில் பாடுகிறார்.

உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாக மதுரையில் வந்து பிறந்ததும், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் சுந்தர பாண்டியனாகத் திரு அவதாரமெடுத்ததும், முருகக்கடவுள் உக்கிர குமாரபாண்டியன் என்று பெயர் கொண்டு பிறந்ததும் ஏன் தெரியுமா? தமிழ் கேட்கத்தான். குளிர்ச்சி பொருந்திய தமிழின் இனிமையைக் கூட்டி உண்பதற்குத்தான். எனவே தமிழின் பெருமையை யாரால் உணர்த்த முடியும்? என்று புளகாங்கிதமடைகிறார் குமர குருபரர்.

தமரநீர்ப் புவனம் முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவி என் றொருபேர்
தரிக்கவந் ததுவும்; தனிமுதல் ஒரு நீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்தமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில் இக்
கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்?

என்பது பாடல். தமிழின் பெருமை கூறும் பாடல்களுக்குள்ளே முதற்றரமான பாடல் இது. தமிழ் இனிமையுடையது. இழும் எனும் ஓசை நயங்கொண்டது என்றெல்லாம் கூறுகின்றோமே. உண்மையாகவா? உண்மை; குமரகுருபரரின் பாடல்கள் சிலவற்றைப் பாடிப்பாருங்கள். தமிழ் தென்றல் நடைபோட்டுவரும்; மலையில் தவழும் அருவிபோலச் சலசலத்துக்கொண்டு பாயும். இதோ ஒரு பாடலைப் பாருங்கள். தமிழின் பெருமையோடு அதன் சாயலும் தெரியப் பாடுகிறார்.

மதுரைமா நகரத்திலே, அதன் பெருமையைப் பறை சாற்றியபடி சிவபெருமான் ஆடிக்கொண்டிருக்கிறார். பக்கத்திலே நடனத்துக்கு ஏற்ற விதமாகக் கலைமகள் வேதங்

களோடு இசைபொருந்திய. முத்தமிழ்ப் பாடல்களை மீட்டிக்கொண்டிருக்கிருள். இதை ஒரு தலைவி கண்டாள். கண்டதும் காதல்வயப்பட்டு விட்டாள்;

ஏடார் புண்டரிகத் திருமான் முதுபாடல்
எழுதா மறையோடும் இசைமுத் தமிழ்பா—
பீடார் கூடல்வளம் பாடா ஆடல் செயும் [கேன்
பெருமான் முன்சென்ருள்; சிறுமான் என்சொல்
பாடாள் அம்மனையும், நாடாள் எம்மனையும்
பயிலாள் தண்டலையும், முயலாள் வண்டலையும்
ஆடாள் மஞ்சனமும் தேடாள் அஞ்சனமும்
அயிலாள் அன்னமுமே, துயிலாள் இன்னமுமே

செவிலி சொல்லுகின்ருள். காதல் வயப்பட்டவளின் நிலையை எப்படிச் சொல்லப்போகிறேன். அம்மானைப் பாடல்கள் பாடுவதை அவள் விட்டுவிட்டாள். அதுமாத்திரமா? எம்மனையை நாடுவதையும் நிறுத்திக்கொண்டாள்; தண்டலை - சோலை. சோலைக்குப் போவதையும் விரும்புகின்ருளில்லை. அங்கு விளையாடுவதையும் வெறுத்து விட்டாள். இம்மட்டோ? மஞ்சனம் - நீர் - ஆடுவதையும் அஞ்சனம் எழுதுவதையும் விரும்புகிருளில்லை. சோறும் தூக்கமும் விட்டு எவ்வளவோ காலமாய்விட்டது. சாதாரண காதல் நிலைதான். பாட்டில் அபாரமாக - மறக்க முடியாமல் விழுந்திருக்கிறது. திரும்பவும் பாடிப்பாருங்கள்.

பாடாள் அம்மனையும் நாடாள் எம்மனையும்
பயிலாள் தண்டலையும் முயலாள் வண்டலையும்
ஆடாள் மஞ்சனமும் தேடாள் அஞ்சனமும்
அயிலாள் அன்னமுமே துயிலாள் இன்னமுமே.

காதல் கொண்ட பெண் தன் காதலர் கண்ணினுள்ளே இருக்கிருர். கண்ணுக்கு மை தீட்டினுல் அவர் மறைந்து விடுவார் என்பதற்காக அஞ்சனம் எழுதமாட்டாள் என்பதை "கண்ணுள்ளார் காதலராகக் கண்ணும் எழுதேம்

கரப்பாக்கு அறிந்து'' என்னும் திருக்குறள் அழகாகக் கூறு கிறது.அதைச் சுருக்கி 'தேடாள் அஞ்சனமும்' எனக் குமர குருபரர் அமைத்திருக்கும் முறை வியக்கத்தக்கதாய் இருக் கிறது.

கலம்பகங்களுள் மறம் என்ற துறையை வீரத்துக்கு எடுத்துக்காட்டாகப் புலவர்கள் அமைத்திருக்கிறார்கள். மறவர்களிடம் அவர்களது மகளை மணஞ்செய்து தரும் படி அரசர்கள் தூதனுப்ப, அவர்கள் தூதுவனை நோக்கி அரசனை இகழ்ந்து மணத்தை மறுத்துக் கூறுவதாக அமை வது இது. திருவெங்கைக் கலம்பகத்தில் கற்பனைக் களஞ் சியம் சிவப்பிரகாசசுவாமிகள் இதை அருமையாக அமைத்திருக்கிறார், மனைவியை அரிச்சந்திர மன்னன் பிரா மணனுக்கு விற்றான். நளமகாராசன் பாதித்துகிலோடு அழவிட்டு ஓடிவிட்டான்; பஞ்சபாண்டவர்களோ பாஞ் சாலியின் துகில் உரியப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இன்னும் அரசர்கள் தங்களுக்குப் "பெண் வேண்டுமென்று கேட்க என்ன வாய் இருக்கிறது? என்று கேட்கிறான் திரு வெங்கைக் கலம்பகத்து வேடன்.

விற்றதார்? கலைபாதியோடு
வனத்திலே அழவிட்டதார்?
வெஞ்சிறைப் படவிட்டதார்? துகில்
உரியநின்று விழித்ததார்?
உற்றதாரமும் வேண்டும் என்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ?

அரசர்களுக்கு மட்டுமா கொடோம்; கடவுளர்களுக் குக் கூடக் கொடுக்க மாட்டோம். முருகப் பெருமானே கிழ வேடத்தில் வந்து எச்சிலாகிய தேனையும் தினைமா வையும் தின்றும் வளர்த்த பிள்ளையாகிய வள்ளியைக் கொடுத்தோமே யல்லாது பெற்றபிள்ளையைக் கொடுக்க வில்லையே என்கிறான் அவன்;

விமலரானவர் எம்மையடுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாம் ஒரு
பெண்வளர்ப் பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்பரோ இவண்
பேய் பிடித்திடு தூதரே.

என்பது பாடல்;

இந்த மறம் என்ற பகுதியை மதுரைக் கலம்பகத்திலே குமரகுருபரரும் அழகாகப் பாடியுள்ளார், பாடல் பின் வருவது:-

தரு முகத்து நிமிர் குடுமி
மாடக் கூடல்
சவுந்தரபாண் டியர்குடியாம்
சமரிலாற்று (து)
ஒரு முகத்தில் ஒரு கோடி
மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவன் யார்
உரையாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம்
மடக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த
வார்த்தை சொன்னாய்
திருமுகத்தில் எழுத்திது வேல்
திருமுடியில் எழுத்தும்
தேர்ந்தறியக் கொண்டுவா
சிகையினொடுஞ் சென்றே.

உன் தலையெழுத்தைப் பார்த்துவிட்டு என்னோடு பேசு என்று சாதாரணமாக, கோபத்தில் சொல்லுகி றோமே அதுபோலக் குமரகுருபரரின் மறவன் பேசுகிறான்;

தமிழின் இனிமை, அழகு, செழுமை, ஆழம் இவற்றை அறியவேண்டுமா? குமரகுருபரரிடம் போங்கள்; அவர் தம் கவிதைகளில் அள்ளி அள்ளித் தருவார். ○



இந் நூலாசிரியராகிய இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் 'ஈழகேசரி' பொன்னையா அவர்கள் பிறந்த குரும்பசிட்டியில் 1916ஆம் ஆண்டு பிறந்தவர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் 1938 இல் படித்து வெளியேறும் போது பண்டிதமணி 'சி. க.' போன்றோரிடம் 'நல்ல இரசிகர்' என்று பெயர் பெற்றவர்.

இந்த நூலில், இவர் வானொலியில் பேசிய எட்டுக் கட்டுரைகள் இருக்கின்றன. பள்ளு நூல்களில், அதிகம் வழங்காத குதிரைமலைப் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு என்ற நூல்களையும், பரணி நூல்களில் பலர் வாசித்துப் பார்க்காத தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி என்ற நூல்களையும் ஆசிரியர் அறிமுகப்படுத்தி ஓரளவு நல்ல பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

*“கவியில் உயிரோடும் இடம் செந்திநாதனுக்கு மணக்கும். அது அவர் பிறப்போடு பிறந்தது. தான் பெற்ற உணர்வை அப்படியே சொற்சித்திரமாக வடிக்கும் ஆற்றல் அவர் நாவில் பிறந்தது”*

— க. சச்சிதானந்தன்.

அனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.